بسم الله الرحمن الرحيم

مخلوط محفلوں سے اجتناب (تمل)

# கூடலின் கேடுகள்

உருது மூலம்:-

**மௌலானா பீர் துல்ஃபிகார் அஹ்மத் நக்ஷ்பந்தீ, முஜத்தீதி [ரஹ்]**

حضرت مولانا پیر ذوالفقار احمد نقشبندی مجددی رحمۃ اللہ علیہ

தமிழில்:-

**மௌலவி ரியாஜுத்தீன் ஹஸனீ**

வெளியீடு:-

சமூக சீர்திருத்தப் பாசறை

(தாருல் இஸ்லாஹ்)

பள்ளபட்டி.

# நூல் விபரம்


| | | |
|---|---|---|
| நூல் பெயர் | : | கூடலின் கேடுகள்!... |
| ஆசிரியர் பெயர் | : | மௌலானா மௌலவி ரியாஜுத்தீன் ஹஸனீ |
| பதிப்புரிமை | : | ஆசிரியருக்கே |
| பக்கம் | : | 69 |
| விலை | : | ரூ. 35. 00 |
| முதல் பதிப்பு | : | மே - 2026<br>துல் ஹிஜ்ஜா - 1447 |
| தட்டச்சு | : | மௌலானா, அப்துல் காதிர் ஹஸனீ, PH. 6385575974 |
| வெளியீட்டு எண் | : | 13 |

**நூல் கிடைக்குமிடம்:**

சமூக சீர்திருத்தப் பாசறை

(தாருல் இஸ்லாஹ்) பள்ளபட்டி.

செல்: 89256 11688

# பொருளடக்கம்

1. முன்னுரை!........................................................6
2. வாழ்த்துரை!.....................................................10
3. கூடலின் கேடுகள்..............................................12
4. கண்ணியமான பெண்களின் கட்டுப்பாடு.............................12
5. இது மறுக்க முடியாத உண்மை.......................................14
6. செய்யக்கூடாத ஒன்றைச் செய்வதற்கான வாய்ப்புகளையும் தவிர்க்க வேண்டும்................................................15
7. பொன்னான இரண்டு விதிகள்..........................................15
8. மர்ஃபியின் தத்துவம்..................................................15
9. வறுத்தப்படுவதை விட எச்சரிக்கையாக இருப்பதே சிறந்தது..15
10. நபி ﷺ அவர்களுடைய ஷரியத்தின் அழகும், மாண்பும்....16
11. கல்வி போதிக்க பெண்களுக்குத் தனியான நாள்................17
12. பெண்களுக்கான தனிப் பாதை.......................................18
13. பள்ளிவாசலுக்கான தனி நுழைவாயில்............................19
14. தொழுகை வரிசைகளில் தனித்தனி இட ஒதுக்கீடு...........20
15. மஸ்ஜிதில் தொழுவதை விட வீட்டில் மறைவாக தொழுவதே மேலானது...........................................................21
16. ஹஜ்ஜில் பெண்களின் வழிமுறை...................................22
17. ஜனஸாவில் கலந்துகொள்வது........................................23

18. பெண்களின் இயல்பு....................................................23

19. தந்திரமான மற்றும் வஞ்சகமான பெண்களின் சில நிகழ்வுகள் பின்வருமாறு.........................................................24

20. கழுதைக்காரனும் காணக்கூடாததைக் கண்டு விட்டான்....27

21. பேச்சை நம்பி காட்சியை மறுத்தேன்..............................28

22. கனவு காண்பதற்கும் கட்டுப்பாடுகள் உண்டோ!................32

23. பேராசை பெருநஷ்டம்..................................................34

24. ஆண்களின் இயல்பு......................................................36

25. சில முக்கியமான குறிப்புகள் பின்வருமாறு.....................37

26. வாலிபர், வயோதிகர் எவருக்கும் வாய்ப்பளிக்காதே.........37

27. ஆண்கள் வயோதிகமடைய மாட்டார்கள்..........................38

28. மனம் ஒருபோதும் நிரம்புவதில்லை.................................39

29. வானத்தைப் பார்ப்பதில்.................................................39

30. தண்ணீர் குடிப்பதில்.....................................................39

31. அல்லாஹ்வின் இல்லத்தைக் காண்பதில்..........................40

32. ஒரு ஆணுடைய மனம் பெண்ணுடைய விஷயத்தில்........40

33. கூடல் இல்லையானாலும் தேடல் ஓய்வதில்லை.............41

34. கிடா சேர்க்கையைக் கண்டு களித்தல்..........................42

35. மக்கிய எலும்புகளிலும் ஈர்ப்புண்டு................................42

36. மேலே கூறியவற்றின் சாராம்சம்....................................43

37. இருபாலர் கலப்புக் கல்வியின் தீமைகள்........................44

38. மஹ்றம் அல்லாதவர்கள் (அந்நிய ஆண்கள்) பற்றிய தயக்கம் நீங்கிவிடும்....................................................47

39. நவ நாகரிக மோகம்..................................................48

40. சகஜமான நட்புறவுகள்..................................................49

41. பாலியல் முறைகேடுகள்..................................................50

42. இதோ சில கசப்பான உண்மைகள் உங்களுக்கு முன்........51

43. மூன்றாம் வகுப்பு மாணவன்..........................................52

44. வெட்கத்தை வேரறுக்கும் திட்டம்..................................52

45. நூறு வருங்கால மனைவிகள்..........................................57

46. பெண்கள் பேருந்துகள் போன்றவர்கள்..........................59

47. மாடுகளை வளர்க்க வேண்டிய அவசியம் என்ன?..........60

48. கூட்டு விபச்சாரக் கொண்டாட்டங்கள்............................61

49. வன் புணர்வுகளின் தறிகெட்ட போக்கு ..........................62

50. நாயுடன் தகாத உறவு..................................................64

51. விபச்சார உபகரணங்கள்..................................................64

52. வாய்வழிப் புணர்ச்சி..................................................65

53. நானும், நீயும், தனிமையாக..........................................66

54. பழைய ரொட்டியும் பாக்கியமானதே!..............................67

# முன்னுரை!

அளவற்ற அருளாளனும், நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருப்பெயரால்...

எல்லாப் புகழும் அகிலங்கள் அனைத்தையும் படைத்துப் பரிபாலித்து வரும் அல்லாஹ் ஒருவனுக்கே உரியது. அவனது இறுதித் தூதர், மனிதகுலத்தின் வழிகாட்டி முஹம்மது நபி ﷺ அவர்கள் மீதும், அவர்களது குடும்பத்தார், தோழர்கள் மற்றும் நேர்வழியைப் பின்பற்றிய அனைவர் மீதும் அல்லாஹ்வின் சாந்தியும் சமாதானமும் என்றென்றும் நிலவட்டுமாக!

இஸ்லாம் என்பது வெறும் வழிபாட்டு முறைகளை மட்டும் கொண்ட ஒரு மார்க்கமல்ல; அது மனித வாழ்க்கையின் ஒவ்வொரு நொடியையும், ஒவ்வொரு தேவையையும் செப்பனிடும் உன்னதமான வாழ்க்கை நெறியாகும். மனிதனின் ஆன்மீகத் தூய்மையைப் பேணுவதோடு நின்றுவிடாமல், அவனது சமூக, குடும்ப மற்றும் ஒழுக்கவியல் வாழ்வைப் பாதுகாப்பதிலும் இஸ்லாம் தனி கவனம் செலுத்துகிறது. மனித குலத்தின் தூய்மையான வாழ்வுக்கு அடித்தளமாக விளங்குவது ஒழுக்கமும், வெட்க உணர்வுமாகும்.

இன்றைய நவீன உலகம் அறிவியல் மற்றும் தொழில் நுட்பத் துறைகளில் அசுர வளர்ச்சி கண்டுள்ள அதே வேளையில், கலாச்சார மற்றும் ஒழுக்கவியல் ரீதியாகப் பெரும் சவால்களைச் சந்தித்து வருகிறது. குறிப்பாக, கட்டுப் பாடற்ற ஆண்-பெண் கலப்பும் (Free Mixing), மார்க்கம் அனுமதித்த வரம்புகளை மீறிய உறவுகளும் சமூக

அமைப்பையே உலுக்கி வருகின்றன. நாகரிகம் என்ற போர்வையில் பரப்பப்படும் இத்தகைய போக்குகள், தனிமனித அமைதியைக் குலைத்து, குடும்பக் கட்டமைப்பைத் தகர்த்து, சமூகத்தில் பேரழிவை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன.

இதனை உணர்ந்தே, புனித அல்-குர்ஆனும், முஹம்மது நபி ﷺ அவர்களின் பொன்மொழிகளும் ஆண்-பெண் பழகும் எல்லைகளை மிகத் தெளிவாக வகுத்துத் தந்துள்ளன. "விபச்சாரத்தின் பக்கமே நெருங்காதீர்கள்; நிச்சயமாக அது மானக்கேடான காரியமாகவும், தீய வழியாகவும் இருக்கிறது"" **[அல்-குர்ஆன் 17:32]**

என்ற இறைவசனம், தீமையின் முடிவை மட்டுமல்ல, அதற்குக் காரணமான ஆரம்பக் கட்டங்களையும் (கட்டுப்பாடற்ற கலப்பு, தேவையற்ற பார்வைகள்) தடுத்து நிறுத்துகிறது.

இந்த நூல், தற்காலச் சூழலில் ஆண்-பெண் கட்டுப்பாடற்ற கலப்பினால் ஏற்படும் ஆன்மீக, உளவியல் மற்றும் சமூக ஆபத்துக்களைப் பற்றியும், மார்க்க வரம்புகளை மீறிய கூடல்களால் விளையும் கேடுகளைப் பற்றியும் குர்ஆன் மற்றும் சுன்னாவின் ஒளியில் விரிவாக ஆராய்கிறது.

இவ்வுலகில் ஒழுக்கமான, தூய்மையான வாழ்வை வாழ்ந்து, மறுமையில் இறைவனின் நற்கூலியைப் பெறத் துடிக்கும் ஒவ்வொரு முஸ்லிமுக்கும், குறிப்பாக இன்றைய இளைஞர் சமுதாயத்திற்கு ஒரு வழிகாட்டியாகவும், எச்சரிக்கையாகவும் அமையும் நோக்கில் இது தொகுக்கப்பட்டுள்ளது.

இந்நூலை வாசிக்கும் வாசகர்கள், இதில் உள்ள உண்மைகளை விளங்கி, தங்களது வாழ்விலும், தங்களைச் சார்ந்தவர்களின் வாழ்விலும் ஒழுக்க விழுமியங்களைப்

பேணி நடக்க வல்ல அல்லாஹ் அருள் புரிவானாக! இந்நூலின் உருவாக்கத்திற்காக உழைத்த அனைவரின் நற்செயல்களையும் ஏற்று, இதற்குரிய நற்கூலியை இரு உலகிலும் வழங்கியருள்வானாக! ஆமீன். ஆமீன்.

இப்படிக்கு:

மௌலானா மௌலவி

**முஃப்தி ஷகீல் அஹ்மத் நக்ஷபந்தி**

துணை முதல்வர்

மத்ரஸா பாக்கியாத்துஸ் ஸாலிஹாத்,

வேலூர். செல்;9444453232

# دعائیہ کلمات بابرکات

## محبوب العلماء والصلحاء حضرت اقدس مولانا حافظ پیر ذوالفقار احمد صاحب نقشبندی مجددی مدظلہ العالی دامت برکاتہم

اللہ رب العزت کی سنت ہے کہ انبیاء کرام علیہم الصلوۃ والسلام کو اپنی قوم کی زبان میں مبعوث فرماتے ہیں ۔ چنانچہ ارشاد باری تعالی ہے ۔ ''وَمَآ أَرۡسَلۡنَا مِن رَّسُولٍ إِلَّا بِلِسَانِ قَوۡمِهِۦ'' (اور ہم نے ہر رسول کو ان کی قوم کی زبان ہی میں مبعوث کیا ہے)

اس زمانے میں علاقائی زبان میں اصلاح وارشاد تصوف وسلوک نیز دین کے تمام ہی شعبوں کا لسانی وقلمی کام جلد اثر انداز اور قبولیت عامہ کا ذریعہ ہے ۔

تمل زبان بہت قدیم زبان ہے، اس زبان کے بولنے والے دنیا کے مختلف ممالک میں کثیر تعداد میں آباد ہیں، تصوف کے علوم تقریبا یا تو عربی میں ہیں یا فارسی اور اردو زبان میں ۔ موجودہ دور میں سلسلۂ عالیہ نقشبندیہ سے اللہ رب العزت نے سارے عالم میں خوب فیض جاری فرمایا ہے ۔

نہ صرف تمل علاقے کے لیے بلکہ اس زبان کے بولنے والے سب ہی بندگان خدا کے حق میں خواہ وہ دنیا کے جس خطے میں ہوں یہ بڑی نعمت ہے کہ عزیز گرامی قدر مولانا مفتی شکیل احمد صاحب نقشبندی مجددی سلمہ زید مجدہ اپنی مجالس میں اس فقیر کے طویل خطبات سے اہم اہم مضامین ونکات کا انتخاب کرتے ہیں اور انہیں بزبان تمل ترجمہ کر کے مختصر ومفید اور جامع انداز میں رسائل کی شکل میں طبع کروا کر ہزاروں کی تعداد میں عام کرتے ہیں، رمضان المبارک میں دوران اعتکاف ان مرتب شدہ رسائل کی مستقل تعلیم ہوتی ہے، الحمد للہ ہزاروں کا مجمع ان رسائل سے استفادہ کر رہا ہے ۔

اللہ رب العزت سے دعا ہے کہ عزیز موصوف کی اس محنت کو شرف قبولیت بخشے اور دارین میں نفع ونجات کا ذریعہ بنائے ۔ آمین

فقیر ذوالفقار احمد نقشبندی مجددی رحمتہ اللہ علیہ

کان اللہ لہ عوضًا عن کل شیئٍ

# வாழ்த்துரை!

மஹ்பூபுல் உலமா வஸ்ஸுலஹா ஹஜ்ரத் அக்தஸ் மௌலானா ஹாபிழ் ஃபீர் ஜுல்ஃபிகார் அஹ்மத் ஸாப் நக்ஷ்பந்தி, முஜத்திதீ ﵀ அவர்களின் பரக்கத் பொருந்திய துஆவின் வார்த்தைகள்.

நபிமார்களை அவர்களின் சமூக மக்கள் என்ன மொழி பேசுகிறார்களோ அதே மொழியைப் பேசுபவர்களாக அனுப்புவது அல்லாஹ்வுடைய சுன்னத்தாகும். இதையே எல்லாம் வல்ல அல்லாஹ் கூறுகிறான்:

وَمَا أَرْسَلْنَا مِنْ رَّسُولٍ إِلَّا بِلِسَانِ قَوْمِهِ

**“மேலும் நாம் ஒவ்வொரு தூதரையும் அவர்களுடைய சமூகத்தாரின் மொழியைப் பேசக்கூடியவர்களாக அனுப்பியுள்ளோம்.”**

தற்காலத்தில் சீர்திருத்தம் மற்றும் வழிகாட்டுதல், சூஃபித்துவம் மற்றும் சுலூக் உடைய உபதேசங்கள், அதே போல் மார்க்கத்தின் அனைத்து துறைகளிலும் பேச்சு மற்றும் எழுத்தின் மூலமாக நடைபெறும் சேவைகள் அனைத்தும் அவரவர்களுடைய பிராந்திய மொழியில் இருந்தாலே விரைவான தாக்கத்தையும், பொது அங்கீகாரத்தையும் பெறக் கூடியதாக இருக்கும்.

அவ்வகையில் தமிழ் மொழி என்பது மிகத் தொன்மையான மொழியாகும் . அதைத் தாய்மொழியாகக் கொண்டுள்ளவர்கள் உலகம் முழுவதும் அதிக எண்ணிக்கையில் பரவியுள்ளனர்.

சூஃபித்துவ ஞானங்கள் அனைத்தும் கிட்டத்தட்ட அரபு, பாரசீகம் மற்றும் உருது மொழிகளில் மட்டுமே உள்ளன.

தற்போதைய சுழலில், அல்லாஹ் நக்ஷபந்தி தரீக்காவின் மூலம் முழு உலகிலும் சீர்திருத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறான். தமிழ்நாட்டிலுள்ளவர்களுக்கு மட்டுமல்லாமல் இந்த மொழியைப் பேசக்கூடிய அல்லாஹ்வின் அடியார்கள் உலகின் எந்தப் பகுதியில் இருந்தாலும் சரி அவர்களுக்கும் இந்த செயல் மிகப் பயனுள்ளதாகும்.

நமது அன்பான மௌலானா முஃப்தி ஷகீல் அகமது சாஹிப் நக்ஷபந்தி முஜத்திதீ அவர்கள் இந்த ஃபக்கீருடைய பல உபதேசங்களிலிருந்து முக்கியமான பகுதிகளைத் தேர்ந்தெடுத்து, அவற்றை தமிழில் மொழிபெயர்த்து, குறுகிய, பயனுள்ள துண்டுப்பிரசுரங்களாகவும் மற்றும் சிறு தொகுப்புகளாகவும் அச்சிட்டு ஆயிரக்கணக்கானோருக்கு விநியோகிப்பது ஒரு பெரிய பாக்கியமான காரியமாகும்.

மேலும் புனித ரமலான் மாதத்தில், இந்தத் தொகுப்புகள் தொடர்ந்து படிக்கப்பட்டு வருலதும் மிக மகிழ்ச்சிக்குரிய விஷயமாகும். அல்ஹம்துலில்லாஹ், ஆயிரக்கணக்கான மக்கள் இதனால் பயனடைகிறார்கள்.

ஹஜ்ரத் அவர்களின் இந்த முயற்சி ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்று நான் அல்லாஹ்விடம் விஷேசமாக துஆ செய்கிறேன். அல்லாஹ் அவர்களை மன்னித்து, அவர்களுக்கு நன்மை மற்றும் மன்னிப்பற்குக் காரணமாக இதை ஆக்குவானாக.! ஆமீன்.

**பகீர் துல்ஃபிகார் அஹ்மது நக்ஷபந்தி (ரஹ்)**

# கூடலின் கேடுகள்

அல்லாஹ் மனிதனை அனைத்து படைப்பினங்களையும் விட மிகச் சிறந்தவனாக ஆக்கியுள்ளான். மேலும் அவனுக்கு யாருக்கும் வழங்காத பகுத்தறிவின் ஒளியைக் கொடுத்துள்ளான். அவன் வழங்கிய செம்மையான அறிவின் காரணமாகவே, மனிதனுடைய வாழ்க்கைக்கும் விலங்குகளுடைய வாழ்க்கைக்கும் மத்தியில் மிகப் பெரும் வேறுபாடு தென்படுகிறது.

## கண்ணியமான பெண்களின் கட்டுப்பாடு

ஹஜ்ரத் ஆதம் عليه السلام அவர்கள் முதற் கொண்டு இறுதித் தூதர் ஹஜ்ரத் முஹம்மது ﷺ அவர்கள் வரை அனைத்து நபிமார்களுக்கும் வழங்கப்பட்ட ஷரியத்துகளில், ஆண்களும், பெண்களும் பாகுபாடின்றி கலந்திருப்பதற்கு அனுமதி அளிக்கப்படவில்லை.

ஹஜ்ரத் மூஸா عليه السلام அவர்கள் மத்யனை அடைந்தபோது, ஒரு கிணற்றருகே மக்கள் கூட்டம் தங்களுடைய ஆடுகளுக்குத் தண்ணீர் புகட்டிக் கொண்டிருப்பதைக் கண்டார்கள். ஒருபுறம், இரண்டு பெண்கள் மட்டும் தங்களுடைய ஆடுகளுடன் தனியாக நின்றுகொண்டிருந்தனர்.

அங்கிருந்த கூட்டம் கலைந்த பிறகு, அந்தப் பெண்கள் மிச்சம் மீதியுள்ள தண்ணீரை தங்களுடைய ஆடுகளுக்குப் புகட்டலாம் என்று எண்ணியிருந்தனர். எனவே அவர்கள் ஆண்களின் கூட்டத்திற்குள் நுழைய விரும்பவில்லை. ஹஜ்ரத் மூஸா عليه السلام அவர்கள் அவர்களிடம் இது பற்றி கேட்டபோது,

قَالَتَا لَا نَسْقِي حَتَّي يُصْدِرُ الرِّعَاءُ

**“மேய்ப்பர்கள் செல்லும் வரை நாங்கள் நீர் புகட்ட மாட்டோம்” என்று கூறினார்கள்.**

கண்ணியமான குடும்பத்தைச் சேர்ந்த பெண்கள் அந்நிய ஆண்களுடன் சுதந்திரமாகக் கலப்பதை இயல்பாகவே சகித்துக்கொள்ள மாட்டார்கள் என்பது இதன் மூலம் விளங்கப்படுகிறது.

ஜாமிழ் திர்மிதியிலுள்ள ஒரு ஹதீஸில்: ஸையிதா ஜைனப் பின்த் ஜஹஷ் ﵂ அவர்களுக்குத் திருமணம் நடந்தபோது, பர்தா பற்றிய வசனங்கள் அருளப்பட்டன.

அந்நேரத்தில், ஸையிதா ஜைனப் ﵂ அவர்கள் தமது முகத்தைச் சுவரை நோக்கித் திருப்பியவாறு அமர்ந்திருந்தார்கள்.

وَ هِيَ مُوَلِّيَةٌ وَجْهُهَا اِلَي الْحَائِطِ

**“அவர்கள் தன் முகத்தைச் சுவரை நோக்கித் திருப்பி அமர்ந்திருந்தார்கள்” என்று ஹதீஸின் அறிவிப்புகளில் வந்துள்ளது.**

இது, பரிசுத்தமான ஆன்மாக்கள் ஷரியத் வேண்டாம் என்று கூறிய காரியங்களில் விருப்பம் கொள்ளாது என்பதைச் சுட்டிக் காட்டுகிறது.

இருப்பினும், மனிதனுடைய நப்ஸும், ஷைத்தானும் நிரந்தர எதிரிகளாக இருப்பதால் சில சமயங்களில் அவை இரண்டும் இணைந்து செயல்பட வாய்ப்பு கிடைத்துவிட்டால், படிப்படியாக நல்லவர்களையும் கூட பாவத்தில் சிக்க வைத்துவிடுகின்றன.

# இது மறுக்க முடியாத உண்மை

ஒரு குறுகிய சாலையில் இருவழிப் போக்குவரத்து இருந்தால், வாகனங்கள் மோதிக்கொள்ளும் விகிதம் மிக அதிகமாக இருக்கும்.

ஆனால் ஒருவழிப் போக்குவரத்தாக இருந்தால், மோதல் விகிதம் மிகக் குறைவாகவே இருக்கும் என்பதை நாம் அறிவோம்.

அதுபோலவே, ஓர் இடத்தில் ஆண்களும் பெண்களும் சுதந்திரமாகக் கலந்திருந்தால், அவர்கள் பாவத்தில் ஈடுபடும் விகிதமும் மிக அதிகமாகவே இருக்கும்.

எனவே பர்தா அணிய வேண்டும் என்ற கட்டுப்பாடுகளை ஏற்படுத்தி, ஆண்களையும், பெண்களையும் தனித்தனியாக பிரித்தால் மட்டுமே, அவர்கள் பாவத்தில் விழக்கூடிய அபாயத்தை பெருமளவு குறைக்க முடியும்.

இது போன்ற விதிமுறைகளின்படியே முஸ்லிம்களான ஆண்களும் பெண்களும் சுதந்திரமாகக் கலப்பதை முற்றிலுமாகத் தவிர்க்க வேண்டும் என்று ஷரியத் கட்டளையிட்டுள்ளது.

மூங்கில் இருந்தால் தான் முரசு கொட்ட முடியும், தண்டு இருந்தால் தான் தாளம் போட முடியும் என்ற பழமொழி நாம் அறிந்ததே.

இதன் அர்த்தம் என்னவெனில், புல்லாங்குழல் வாசிப்பதை நிறுத்த வேண்டுமானால், அதில் பயன்படுத்தப்படும் மூங்கிலின் உற்பத்தியை நிறுத்த வேண்டும். அதாவது, முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

## செய்யக்கூடாத ஒன்றைச் செய்வதற்கான வாய்ப்புகளையும் தவிர்க்க வேண்டும்

எப்போதெல்லாம் வாகனங்கள் ஒன்றுக்கொன்று நேருக்கு நேர் வருகிறதோ, ஒருநாள் அவை நிச்சயமாக மோதிக்கொள்ளும் என்பதே உண்மை.

அதுபோலவே, மஹ்ரம் அல்லாதவர்களுக்கு ஒருவரை யொருவர் நெருங்கிப் பழக வாய்ப்பு கிடைத்தால் ஒருநாள் அவர்களுக்குள் சந்திப்பு ஏற்படும் என்பதும் உறுதியானதே.

திறமையான இரண்டு ஓட்டுநர்கள் கூட, சற்று கவனக்குறைவாக இருந்தால் விபத்தில் சிக்குவார்கள் என்பது எல்லோரும் அறிந்ததே. அதுபோலவே, நல்லொழுக்கமுள்ளவர்கள் கூட பர்தா அணிவதில் கவனக்குறைவாக இருந்தால், அவர்களும் பாவத்தில் சிக்கி குற்றவாளிகளாக ஆகி விடுவார்கள் என்பதையும் ஏற்றே ஆக வேண்டும்.

### பொன்னான இரண்டு விதிகள்:

சிலர் தங்களின் அன்றாட அனுபவங்கள் மற்றும் அவதானிப்புகளின் அடிப்படையில் சில நல்ல தத்துவங்களை உருவாக்கியுள்ளார்கள். அவ்வாறான தத்துவங்களில் இரண்டு பின்வருமாறு:

### மர்ஃபியின் தத்துவம்:

தவறு செய்வதற்கு தொடர்ந்து வாய்ப்புகள் அமைந்தால், என்றாவது ஒரு நாள் அது நிகழ்தே தீரும்.

எனவே, தவறு செய்வதற்கான வாய்ப்பைத் தவிர்ப்பதே முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகும். அப்போதுதான்

அதில் ஈடுபடுவதற்கு எந்த சந்தர்ப்பமும் கிடைக்காது. ஓர் இடத்தில் ஆண்களும் பெண்களும் கலந்திருக்கும்படியான கூட்டம் தொடர்ந்து நடத்தப்பட்டால், அங்கு தவறுகளும் விதவிதமாக அறங்கேறியே தீரும்.

## வறுத்தப்படுவதை விட எச்சரிக்கையாக இருப்பதே சிறந்தது

வறுத்தப்படுவதை விட எச்சரிக்கையாக இருப்பது சிறந்தது. எந்தவொரு செயலில் இழிவு மற்றும் வறுத்தம் ஏற்படும் அபாயம் உள்ளதோ அந்தச் செயலில் ஒருவர் மிகவும் கவனமாக இருக்க வேண்டும்.

அதேபோல், ஒருவர் தனது மானம், கண்ணியத்தையும் பாதுகாக்க விரும்பினால், ஆரம்பமாக அவர் கலப்புக் கூட்டங்களுக்குச் செல்வதைத் தவிர்க்க வேண்டும்.

இந்த இரண்டு கொள்கைகளையும் மனதில் கொண்டு, ஒரு பெண் எப்போதும் முகத்தை மறைக்காமல் ஆண்களின் முன் தன்னை வெளிப்படுத்தக்கூடாது என்றும், கலப்புக் கூட்டங்களில் தான் ஒரு அலங்காரமாக திகழக்கூடாது என்றும் முடிவு செய்ய வேண்டும்.

இதிலே தான் மானம் மற்றும் மரியாதைக்கு உரிய பாதுகாப்பு உள்ளது. மேலும் இதுவே ஷரியத்தின் கட்டளையாகவும் உள்ளது.

### நபி ﷺ அவர்களுடைய ஷரியத்தின் அழகும், மாண்பும்:

இஸ்லாத்தின் சட்ட திட்டங்களில் நேர்த்தியும், பாங்கும் எந்தளவு உள்ளதெனில் எந்தெந்த காரியங்களை இஸ்லாம் தடைசெய்துள்ளதோ அதன் தொடக்கத்தையும் சேர்த்தே தடைசெய்திருக்கும்.

உதாரணமாக, இஸ்லாம் விபச்சாரத்தைத் தடை செய்துள்ளது. அதனால் அதன் தொடக்கமாக உள்ள ஆண்களும் பெண்களும் சுதந்திரமாக ஒன்று கூடுவதையும் கடுமையாகத் தடைசெய்துள்ளது. மேலும் எச்சந்தர்ப்பங்களில் ஆண்களும் பெண்களும் ஒன்றுகூடுவதற்கு வாய்ப்புகள் அதிகம் உள்ளதோ அங்கு ஒன்று கூடுதலை சாத்தியமற்றதாக ஆக்கக் கூடிய வகையில் தெளிவான வரையறைகளைக் கூறியுள்ளது. சில உதாரணங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

**கல்வி போதிக்க பெண்களுக்குத் தனியான நாள் :**

ஒருமுறை ஹஜ்ரத் அஸ்மா பின்த் ஸைத் ﵂ அவர்கள் நபிகள் நாயகம் ﷺ அவர்களிடம் வந்து, “அல்லாஹ்வின் தூதரே! நான் எனக்குப் பின்னால் இருக்கும் முஸ்லிம் பெண்களுடைய குழுவின் பிரதிநிதியாகவும், தூதாகவும் வந்துள்ளேன்.

அவர்கள் அனைவரும் நான் கேட்பதையே கேட்கிறார்கள். அவர்கள் அனைவரும் என்னைப் போன்றே ஒரே கருத்தைக் கொண்டுள்ளனர். எனது வேண்டுகோள் என்னவென்றால், அல்லாஹ் உங்களை ஆண்களுக்கும், பெண்களுக்கும் தூதராக அனுப்பியுள்ளான். நாங்கள் உங்களை நம்பி உங்களைப் பின்பற்றினோம். பெண்களான நாங்கள் எங்கும் வெளியேறாமல் எங்களுடைய வீடுகளிலேயே தங்கியிருக்கிறோம்.

மேலும் நாங்கள் ஆண்களின் பாலியல் தேவைகளைப் பூர்த்தி செய்கிறோம். அவர்களுடைய குழந்தைகளை வளர்க்கிறோம், அதே நேரத்தில் ஆண்கள் ஜமாஅத் தொழுகைகளிலும், ஜனாஸா தொழுகைகளிலும் கலந்துகொள்கிறார்கள். மேலும், அவர்கள் ஜிஹாதில்

பங்கேற்பதன் காரணமாக, நற்செயல்களில் எங்களை முந்திவிடுகின்றனர்.

ஆண்கள் ஜிஹாதுக்குச் செல்லும்போது, நாங்கள் அவர்களின் சொத்துக்களைப் பாதுகாக்கிறோம். அவர்களின் குழந்தைகளை வளர்க்கிறோம். எனவே அவர்களுக்குக் கிடைக்கும் கூலியிலும், வெகுமதியிலும் எங்களுக்கும் பங்கு கிடைக்குமா? என்று கேட்டார்கள்.

இதைக் கேட்ட நபிகள் நாயகம் ﷺ அவர்கள் தம் தோழர்களை நோக்கித் திரும்பி, "மார்க்கத்தைப் பற்றி இவரை விடச் சிறந்த கேள்வியைக் கேட்ட வேறு எந்தப் பெண்ணையாவது நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்களா?" அதற்கு நபித் தோழர்கள் அனைவரும், "ஆம், அல்லாஹ்வின் தூதரே! நிச்சயமாக, இந்தப் பெண் மிகச் சிறந்த கேள்வியைக் கேட்டுள்ளார்" என்றனர்.

உடனே நபிகள் நாயகம் ﷺ அவர்கள், "அஸ்மாவே, நீ சென்று எல்லாப் பெண்களிடமும் சொல். நீங்கள் உங்களின் கணவர்களுக்குப் பணிவிடை செய்வதினால், அவர்களுடைய பொருத்தத்தைத் தேடுவதினால், அவர்களுக்குக் கீழ்ப்படிவதினால், ஆண்களைப் பற்றி நீ குறிப்பிட்ட எல்லா நன்மைகளிலும், வெகுமதிகளிலும் நீங்கள் அவர்களுடன் சமமாகுவீர்கள் என்று கூறினார்கள்." இதைக் கேட்டதும், ஹஜ்ரத் அஸ்மா அவர்கள் அல்லாஹு அக்பர் என்று கூறி, மேலும் கலிமா தய்யபாவை ஓதியபடி மகிழ்ச்சியுடன் திரும்பினார்கள்.

**பெண்களுக்கான தனிப் பாதை:**

நபிகள் நாயகம் ﷺ அவர்கள் பெண்களை நோக்கி,

عَلَيْكِنَّ بِحَافَاتِ الطَّرِيْقِ

**“பெண்களே! சாலையின் ஓரத்தில் நீங்கள் நடக்க வேண்டும்” என்று கூறினார்கள்.**

ஒரு பெண் எங்காவது செல்ல விரும்பினால், அவள் சாலையின் நடுவிலோ, அல்லது ஆண்களுக்கு மத்தியிலோ நடக்கக்கூடாது. மாறாக, ஆண்களிடமிருந்து விலகி இருப்பதற்காக சாலையின் ஓரத்தில் நடக்க வேண்டும். இந்தக் கட்டளைக்குப் பிறகு, சஹாபா பெண்மணிகள் சாலையில் செல்லும் போது சுவர்களுக்கு மிக அருகில் நடப்பார்கள் என்றும், அவர்களின் ஆடைகள் சுவர்களைத் தொட்டுக் கொண்டிருக்கும் என்றும் அறிவிப்புகளில் கூறப்பட்டுள்ளது.

**பள்ளிவாசலுக்கான தனி நுழைவாயில்:**

நபி ﷺ அவர்களின் பள்ளிவாசலில் ஒரு கதவு பெண்களுக்காக ஒதுக்கப்பட வேண்டும் என்றும், அதன் வழியாக பெண்கள் மட்டுமே வந்து செல்ல வேண்டும், ஆண்கள் இந்தக் கதவின் அருகே கூட செல்லக்கூடாது என்றும் ஹஜ்ரத் உமர் ؓ அவர்கள் கட்டளை பிறப்பித்தார்கள்.

ஹஜ்ரத் இப்னு உமர் ؓ அவர்கள் இந்தக் கட்டளையைக் கேட்ட பிறகு, தான் இறக்கும் வரை இரவும், பகலும் எந்த நேரத்திலும் இந்தக் கதவின் வழியாகச் செல்ல மாட்டார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தக் கதவிற்கு (பாபுன் னிஸா) பெண்களின் நுழைவாயில் என்றே அழைக்கப்பட்டது.

அபூ தாவூத்துடைய ஒரு அறிவிப்பில்

لَوْ تَرَكْنَا هَذَا الْبَابَ لِلنِّسَاءِ قَالَ نَافِعٌ فَلَمْ يَدْخُلْ مِنْهُ ابنُ

عُمر حَتي مَاتَ

இந்தக் கதவை பெண்களுக்காக நாம் ஒதுக்கிவிடலாம் என்று கூறப்பட்ட பிறகிருந்தே, இப்னு உமர் ﵁ அவர்கள் தம் மரணம் வரை அந்த வாசல் வழியாகப் பள்ளிவாசலுக்குள் நுழையவில்லை என்று இமாம் நாஃபி ﵀ அவர்கள் கூறியுள்ளார்கள். நபித் தோழர்களின் இந்த இறையச்சத்திற்கு முன்னால் நாம் எம்மாத்திரம்! அவர்களின் இந்தச் செயல், கலப்புக் கூட்டங்களை ஆதரிப்பவர்களின் முகத்தில் விழுந்த ஒரு பலத்த அறையாகும்.

## தொழுகை வரிசைகளில் தனித்தனி இட ஒதுக்கீடு

தொழுகை வரிசைகளில் ஆண்கள் பெண்களிடமிருந்தும், பெண்கள் ஆண்களிடமிருந்தும் விலகி இருப்பதை அல்லாஹ் விரும்புகிறான். ஆனால் தொழும்போது ஒருவர் எந்த அசுத்தமான செயலையும், மட்ட ரகமான காரியத்தையோ செய்ய முடியாது. அது மட்டுமல்ல தொழும்போது ஒரு ஆணும் பெண்ணும் ஒருவரையொருவர் தவறான பார்வையில் பார்ப்பதும் கடினமானதாகும்.

خَيْرٌ صُفُوفُ الرِّجَالِ اَوَّلُهَا وَ شَرُّهَا آخِرُهَا وَ خَيْرٌ صُفُوفُ
النِّسَاءِ آخِرُهَا وَ شَرُّهَا اَوَّلُهَا

ஆண்களின் வரிசைகளில் சிறந்த வரிசை முதல் வரிசை, மோசமான வரிசை கடைசி வரிசை என்றும் அவ்வாறே பெண்களின் வரிசைகளில் சிறந்த வரிசை கடைசி வரிசை, மோசமான வரிசை முதல் வரிசை என்றும் நபிகள் நாயகம் ﷺ அவர்கள் கூறியுள்ளார்கள்.

தொழும்போது, அல்லாஹ்வின் பக்கம் கவனம் செலுத்தும் நிலை ஏற்படுகிறது. இறை நம்பிக்கை கொண்ட ஒவ்வொருவருக்கும் ஓரளவிற்கு அல்லாஹ்வின் முன் தான் நிற்பதாக எண்ணம் தோன்றவே செய்யும். இந்த இறை சிந்தனையில் ஓர்மையான நிலையில் கூட, ஆண்களும் பெண்களும் கலந்திருப்பது விரும்பப்படாதபோது, பிறகு இறை சிந்தனையை முற்றிலும் மறக்கடிக்கக்கூடிய திருமணக் கூட்டங்களில் ஆண்களும், பெண்களும் கலந்திருப்பது எப்படி அனுமதிக்கப்படும்?

தொழுகையில் பெண்கள் கடைசி வரிசைகளில் நிற்கும்படி கட்டளையிடப்பட்டதற்குக் காரணம், ஆண்கள் தொழுகைக்காக முதலில் பள்ளிவாசல்களுக்குள் நுழைய வேண்டும். பின்னர், தொழுகை முடிந்ததும், பெண்கள் விரைவாக வெளியேறி தங்கள் வீடுகளுக்குச் செல்ல வேண்டும். அதன்பிறகு, ஆண்கள் பள்ளிவாசலை விட்டு வெளியேற வேண்டும் என்பதற்காகத்தான்.

ஷரியத்தின் இந்தளவு முன்னெச்சரிக்கை நடவடிக்கை பின்பற்றப்படுமானால் ஷைத்தானுக்கு அழுவதைத் தவிர வேறு வழியிருக்காது. மக்களை வழிகெடுப்பதற்கான வாய்ப்பே அவனுக்குக் கிடைக்காது.

## மஸ்ஜிதில் தொழுவதை விட வீட்டில் மறைவாக தொழுவதே மேலானது

இஸ்லாத்தில் பெண்கள் பள்ளிவாசலுக்கு வருவதற்குத் தடை விதிக்கப்படவில்லை. எனவே அவர்கள் பர்தாவின் வரம்புகளையும் நிபந்தனைகளையும் கடைப்பிடித்து, ஜமாஅத்துடன் பள்ளிக்கு வந்து தொழ விரும்பினால் பெண்களுக்கே அனுமதிக்கப்படும். இருப்பினும், பெண்கள்

பள்ளிவாசலுக்கு வருவதை விடத் தங்களுடைய வீடுகளில் தொழுவதே விரும்பத்தக்கதாகும்.

உம்மு ஹுமைது ஸாயிதிய்யா ﵂ அவர்கள் நபிகள் நாயகம் ﷺ அவர்களிடம், "அல்லாஹ்வின் தூதரே, நான் உங்களுடன் தொழ வேண்டும் என்று என் மனம் விரும்புகிறது" என்று கூறினார்கள்

அதற்கு நபி ﷺ அவர்கள், "உன் அறையில் தொழுவதை விட, நீ வீட்டின் ஒரு மூலையில் தொழுவது சிறந்தது. மேலும் உன் அறையில் தொழுவது நீ உன் வீட்டின் முற்றத்தில் தொழுவதை விடச் சிறந்தது. மேலும், உன் வீட்டின் முற்றத்தில் தொழுவது, உன்னுடைய மஹல்லா பள்ளிவாசலில் தொழுவதை விடச் சிறந்தது. மேலும் நீ உன்னுடைய மஹல்லா பள்ளிவாசலில் தொழுவது நீ ஜும்ஆ பள்ளிவாசலில் தொழுவதை விட உனக்கு சிறந்தது என்பதை நான் நன்கு அறிவேன் என்று நபி ﷺ அவர்கள் கூறினார்கள்.

இறுதியாக, ஆண்கள் ஒரு பெரிய ஜமாத்தில் தொழுவதற்கும், பெண்கள் வீட்டின் மூலையில் தனியாகத் தொழுவதற்கும் மத்தியில் என்ன வேறுபாடு உள்ளது?. ஆண்களும், பெண்களும் ஒருவரோடு ஒருவர் கலப்பது தடுக்கப்பட வேண்டும் என்பதே இதில் உள்ள நுட்பமாகும்.

## ஹஜ்ஜில் பெண்களின் வழிமுறை

ஹஜ் என்பது இஸ்லாத்தின் அடிப்படைத் தூண்களில் ஒன்றாகும். மேலும் இது ஆண்கள், பெண்கள் ஆகிய இரு சாராரின் மீதும் சுமத்தப்பட்ட கடமையாகும். இது ஆண்களுக்கும் பெண்களுக்கும் கூட்டான வணக்கமாக

இருந்தாலும், முடிந்தவரை இதிலும் கூட ஆண்களுக்கும், பெண்களுக்கும் மத்தியில் கலப்பு முறைப்படுத்தப்பட்டுள்ளது.

அதா ﵀ அவர்கள் அறிவிக்கிறார்கள்: நபிகள் நாயகம் ﷺ அவர்களின் காலத்தில், பெண்கள் ஆண்களுடன் தவாஃப் செய்வார்கள். ஆனால் அவர்கள் ஆண்களோடு கலக்க மாட்டார்கள்.

இதன் கருத்தாவது, பெண்கள் தவாப் செய்யுமிடத்தில் ஒரு ஓரமாக விளிம்பில் நடந்து செல்வார்கள். மேலும் தவாஃபில் ஆண்களும் பெண்களும் கலப்பதை ஹஜ்ரத் உமர் ؓ தடுத்து வந்தார்கள்.

ஒருமுறை, பெண்கள் கூடியிருந்த ஒரு கூட்டத்தில் ஒரு ஆணைக் கண்டபோது, ஹஜ்ரத் உமர் ؓ அவர்கள் அவரைப் பிடித்து அடித்தார்கள்.

## ஜனஸாவில் கலந்துகொள்வது.

ஒரு முஸ்லிமின் இறுதிச் சடங்கை பிற முஸ்லிம்கள் முன்னின்று செய்வது (ஃபர்ழ் கிஃபாயா)கட்டாயம் செய்ய வேண்டிய கடமைகளில் உள்ளதாகும். என்றாலும் பெண்கள் இது போன்ற இறுதிச் சடங்குகளில் கலந்துகொள்வது தடைசெய்யப்பட்டுள்ளது.

இது கலப்புக் கூட்டங்களுக்கு இஸ்லாத்தில் அனுமதிப்பதில்லை என்பதை உறுதிப் படுத்துவதை போன்றிருக்கிறது.

**பெண்களின் இயல்பு:**

ஒரு பெண் நல்லவளாக, ஒழுக்கமுள்ளவளாக மாறினால், அவள் இவ்வுலகில் மிகவும் மதிப்புமிக்க உடைமையாகிறாள். அவள் சீர்கெட்டவளாக மாறினால், வழிகெட்ட ஆண்களை

விடவும் அதிக ஒழுக்கக்கேட்டையும் ஆபாசத்தையும் பரப்பக்கூடியவளாக மாறிவிடுவாள்.

ஒரு வீட்டை ஒரு ஆண் கடப்பாறையால் கூட இடிக்க முடியாத வேகத்தில் ஒரு பெண் சிறிய ஊசியால் அதே வீட்டை இடித்துத் தகர்த்துவிடுவாள் என்று முன்னோர்கள் கூறுவார்கள்.

எனவே, ஒரு பெண் தன் கணவன் மற்றும் பிள்ளைகள் மீதே தன் முழு கவனத்தையும் செலுத்த வேண்டும். அத்துடன் வாய்ப்பு கிடைக்கும்போதெல்லாம், அவள் தன் இறைவனை வணங்குவதில் நேரத்தைச் செலவிட வேண்டும். இந்த இரண்டையும் விடுத்து மற்றவர்களுடன் அதிகமாகக் கலந்துறவாடுதல் ஒரு பெண்ணின் அழிவுக்கு மிக முக்கிய காரணியாகும்.

ஒரு பெண் தன்னுடைய விஷயங்களை கணவனுக்குத் தெரியாமல் மறைக்கத் தொடங்கினால், அது அந்தக் குடும்பம் நாசமாவதற்கான தெளிவான அறிகுறியாகும். ஒரு ஆண் ஒழுக்கக்கேட்டிலும், துர் நடத்தையிலும் எவ்வளவுதான் சீரழிந்தாலும் ஒரு தீய நடத்தை கொண்ட பெண்ணை அவனால் மிஞ்ச முடியாது.

இமாம் சுயூதி ﵀ அவர்கள் துர் அல்-மன்தூர் என்ற நூலில் ஒரு ஹதீஸை அறிவித்துள்ளார்கள்.

عن قيس بن عباد قَالَ أَنَّ اللّٰهَ لما خَلَقَ الارضَ جَعَلَتْ تمور فَقَالَتْ الملائكةُ مَا هَذَا بِمقرةِ علي ظهرهَا فَاصْبَحَتْ صُبْحًا وَ فِيْهَا رَوَاسِهَا فَلَمْ يَدْرُوْا من اَيْنَ خَلَقْتَ ؟ فَقَالُوا رَبُّنَا هَلْ مِنْ خَلْقِكَ شَيْءٌ اَشَدُّ مِنْ هَذَا ؟ قَالَ نَعَمْ الحديد فَقَالُوا

هَل من خلقك شيء اشد من الحديد قال نعم خلق النار
قَالوا ربنا هل من خلقك شيء اشد من النار قال نعم الماء
قالوا ربنا هل من خلقك شيء هو اشد من الماء قال نعم
الريح قالوا ربنا هل من خلقك شيء هو اشد من الريح
قال نعم الرجل قالوا ربنا هل من خلقك شيء هو اشد
من الرجل قال نعم المراة

கைஸ் ﵁ அவர்கள் அறிவிக்கிறார்கள்: அல்லாஹ் பூமியைப் படைத்தபோது, அது சுழலத் தொடங்கியது. அதைக் கண்ட வானவர்கள் இது தன் மீது யாரையும் தங்க அனுமதிக்காதோ என்று கேட்டார்கள்." பின்னர் காலை விடிந்தபோது, அதில் மலைகள் ஊன்றப்பட்டிருந்தன.

இது எவ்வாறு உருவாக்கப்பட்டது என்று வானவர்களுக்கு கொஞ்சமும் தெரியவில்லை. பிறகு வானவர்கள் அல்லாஹ்விடம், "எங்கள் இறைவா, உனது படைப்புகளில் இந்த மலைகளை விட கடினமானவை ஏதேனும் உண்டா?" என்று கேட்டார்கள். அதற்கு அல்லாஹ் கூறினான், "ஆம், இதைவிடக் கடினமானதாக மலைகளை உடைக்கக்கூடிய இரும்பு உள்ளது. (ஏனெனில் இரும்பாலான உளிகள் மலைகளை ஒன்றுமில்லாமலாக்கி விடும்.) பிறகு அவர்கள் கேட்டார்கள் "உனது படைப்புகளில் இரும்பை விட கடினமானவை ஏதேனும் உண்டா?". அதற்கு அல்லாஹ், "ஆம், அதை விட கடினமானதாக இரும்பை உருக்கக்கூடிய நெருப்பு உள்ளது என்று கூறினான் (அது இருப்பையும் உருக்கி திரவமாக்கிவிடும்.)"

பிறகு மீண்டும் வானவர்கள், "எங்கள் இறைவா, உனது படைப்புகளில் நெருப்பை விட கடினமானவை ஏதேனும்

உண்டா ? என்று கேட்டார்கள்.” அதற்கு அல்லாஹ் “ஆம், நெருப்பையும் அணைக்கக்கூடிய தண்ணீர் உள்ளது என்று கூறினான்.” பிறகு வானவர்கள், “எங்கள் இறைவா, உனது படைப்புகளில் தண்ணீரை விட கடினமானவை ஏதேனும் உள்ளதா?” என்று கேட்டார்கள்.

அதற்கு அல்லாஹ், “ஆம், தண்ணீரைக் கூட வாரி இறைத்து அலையாய் மேல் எழச் செய்யும் பலத்த காற்று உள்ளது என்று கூறினான். மீண்டும் அவர்கள், உனது படைப்புகளில் காற்றை விட கடினமானது ஏதேனும் உள்ளதா?” என்று கேட்டார்கள்.

அதற்கு அல்லாஹ் “ஆம், ஒரு ஆண்மகனான மனிதன் உள்ளான்” என்று கூறினான். (ஏனெனில் நபி சுலைமான் عليه السلام அவர்களுக்கு காற்று வசப்படுத்தப்பட்டிருந்து.)

பிறகு வானவர்கள், “எங்கள் இறைவா, உனது படைப்புகளில் ஆண்களை விட கடினமானது ஏதேனும் உள்ளதா?” என்று கேட்டார்கள். “ஆம், ஆண்களைத் தன் சூழ்ச்சியால் மயக்கும் பெண் இருக்கிறாள் என்று கூறினான்.

இந்தக் கருத்து பின்வரும் வசனத்தில் கூறப்பட்டுள்ள கருத்தின் மூலம் மேலும் வலுப்பெறுகிறது. அல்லாஹ், திருக்குர்ஆனில்,

اِنَّ كَيْدَ الشَّيْطَانِ كَانَ ضَعِيْفًا

ஷைத்தானின் வஞ்சகத்தையும் ஏமாற்றத்தையும் விவரிக்கையில், “ஷைத்தானின் வஞ்சகமும், ஏமாற்றமும் பலவீனமானவை மற்றும் இலேசானவை” என்று கூறியுள்ளான்.

அதே சமயம், மிஸ்ரின் இளவரசர் தன் மனைவியை

நோக்கி கூறிய வார்த்தை திருக்குர்ஆனில் மேற்கோள் காட்டப்பட்டுள்ளது.

إِنَّ كَيْدَكُنَّ عَظِيْمٌ

**“உமது வஞ்சகமும், ஏமாற்றமும் மிகப் பெரியது”.**

**தந்திரமான மற்றும் வஞ்சகமான பெண்களின் சில நிகழ்வுகள் பின்வருமாறு:**

**1. கழுதைக்காரனும் காணக்கூடாததைக் கண்டு விட்டான்.**

பனூ இஸ்ரவேலர்களில் ஒரு நல்ல மனிதர் இருந்தார். அவருடைய அழகான மனைவிக்கு ஒரு இளைஞனோடு முறையற்ற பழக்கம் ஏற்பட்டு விட்டது. அவள் அந்த இளைஞனிடம், அவன் விரும்பும் போதெல்லாம் அவளை வந்து சந்திப்பதற்கு ஏதுவான தந்திரங்களை சொல்லித் தந்தாள்.

ஒரு நாள் இதைப் புரிந்து கொண்ட அவளுடைய கணவன், “உன்னுடைய போக்கு எனக்கு நல்லதாகத் தெரியவில்லை. எனவே இதோ இந்த புனிதமான மலையில் ஏறி, நான் எந்த துரோகமும் செய்யவில்லை என்று சத்தியம் செய்” என்றான். அவளும் அதற்கு “சரி” என்று ஒப்புக் கொண்டாள்.

அவளுடைய கணவன் ஏதோ ஒரு வேலைக்காக வெளியே சென்றிருந்தபோது, அவள் அந்த இளைஞனை அழைத்து முழு சம்பவத்தையும் அவனிடம் சொன்னாள்.

அந்த இளைஞன், அவளிடம் சரி இதிலிருந்து தப்பிப்பதற்கு என்ன வழி உள்ளது? என்று கேட்டான். அதற்கு அவள், “கூலி வாங்கிக் கொண்டு கழுதை சவாரி

செய்ய வைப்பவர்களின் ஆடைகளை நீ அணிந்துகொண்டு, நகரத்திற்கு வெளியே இன்னின்ன இடத்தில் நின்று காத்திரு" என்றாள்.

பிறகு அவளுடைய கணவன் வீட்டிற்கு வந்தவுடன் "புனித மலைக்குச் செல்லத் தயாராகு" என்று அவளிடம் கூறினான். உடனே அவள் தன் கணவனுடன் புறப்பட்டாள். அவள் நகரத்தை விட்டு வெளியேறி கொஞ்ச தூரம் நடந்த பின் கழுதை சவாரி அழைத்துச் செல்பவரைக் கண்டபோது, தான் களைப்பாக இருப்பதாகப் பாசாங்கு செய்து, மீதமுள்ள பயணத்தை கழுதை மீது சவாரி செய்தே தான் வர முடியும். இதற்கு மேல் ஒரு எட்டு கூட என்னால் நடக்க இயலாது என்று கூறினாள்.

எனவே அவன் அவளைக் கழுதையின் மீது ஏற்றினான். மலையை அடைந்ததும், அந்தப் பெண் கீழே இறங்கும்போது கழுதையிலிருந்து தவறி விழுவதைப் போன்று வேண்டுமென்றே தாமாக கீழே விழுந்தாள். இதனால் அவளுடைய ஆடை மறைவிடத்தை விட்டு தானாக விலகியதைப் போல் அவள் வேண்டுமென்றே அதைத் திறந்து காட்டினாள்.

பின்னர் அவள் வருத்தப் படுவதைப் போன்று எழுந்து நின்று, தன் கணவன் முன்னிலையில், "இறைவன் மீது ஆணையாக, உங்களைத் தவிர என் மறைவிடத்தை வேறு யாரும் பார்த்ததில்லை, ஆனால் இந்தக் கழுதையின் உரிமையாளர் பார்த்துவிட்டார்" என்று சத்தியமிட்டு கூறினாள்.

**2. பேச்சை நம்பி காட்சியை மறுத்தேன்.**

ஒரு பெண்ணுக்கு ஒரு இளைஞனுடன் தவறான

பழக்கம் ஏற்பட்டு விட்டது. அவளுடைய கணவன் வீட்டை விட்டு வெளியே செல்லும்போதெல்லாம், அவள் அந்த இளைஞனைத் தன் வீட்டிற்கு அழைத்து, அவனுடன் தகாத உறவில் ஈடுபட்டு வந்தாள். ஒருமுறை, ஏதோ ஒரு விஷயத்திற்காக அவளுக்கும் அந்த இளைஞனுக்கும் இடையே கடுமையான வாக்குவாதம் ஏற்பட்டது.

அந்த இளைஞன் கோபத்தில், உன் கணவன் முன்னாலே உன்னுடன் தகாத உறவில் ஈடுபடுவேன் என்று சபதம் செய்து விட்டான். அவனது கோபம் தணிந்த சில நாட்களுக்குப் பிறகு, அவன், தனது சபதத்தை எப்படி நிறைவேற்றுவது என்று தனக்குப் புரியவில்லை என்று அவளிடம் கூறினான்.

அதற்கு அவள், "இது உனக்குக் கடினம், ஆனால் நான் நினைத்தால், எனக்கு இது கடினமில்லை" என்றாள். அவன் அவளுடைய புத்திசாலித்தனத்தைப் பாராட்டி, "என்னால் முடியாததை உண்மையிலேயே உன்னால் சாத்தியமாக்க முடியும்" என்று கூறினான்.

அவளுடைய வீட்டில் மிகவும் உயரமான ஒரு பேரீச்சை மரம் இருந்தது. அதன் கனிகள் மிகவும் சுவையாக இருந்தன. ஆனால், அதில் ஏறி இறங்க நீண்ட நேரம் பிடிக்கும். மேலும் அதில் பழம் பறிப்பது மிகவும் சிரமமான காரியமாக இருந்தது. ஒரு நாள், அவள் தன் கணவனிடம், "நான் இந்த மரத்திலிருந்து கனிகளை என் கைகளால் பறித்து உங்களுக்கு ஊட்ட விரும்புகிறேன்" என்றாள். தன் மனைவி தன் காதலை வெளிப்படுத்த விரும்புகிறாள் என்று அவன் நினைத்தான். எனவே அதற்கு அவன் அனுமதித்தான்.

பிறகு அவள் கயிறு போன்ற ஒன்றைப் பயன்படுத்தி அதில் ஏறினாள். அவள் இறங்கி வரும் வரை கணவன் கீழே காத்திருந்தான். அவள் பேரீச்சைகளைப் பறித்துக் கொண்டிருந்த போது, கீழே பார்த்து கத்தி கூச்சலிட ஆரம்பித்தாள். மேலும் கதறி அழ ஆரம்பித்தாள். தன் மனைவிக்கு என்ன நேர்ந்தது என்று தெரியாமல் அவன் வியந்து நின்று கொண்டிருந்தான்.

அவள் கீழே வந்ததும், தன் கணவனிடம் “நான் பேரீச்சைகளைப் பறிக்கும்போது கீழே பார்த்தேன், நீங்கள் ஒரு பெண்ணுடன் விபச்சாரம் செய்வதைக் கண்டேன்” “சொல்லுங்கள். அவள் யார்?” என்று வாக்குவாதம் செய்ய ஆரம்பித்தாள். அதற்கு அவன் “இங்கே என்னைத் தவிர வேறு யாரும் இல்லை. நான் எப்படி ஒரு பெண்ணுடன் விபச்சாரம் செய்ய முடியும்?” என்று அவளுக்கு மிகத் தெளிவாக விளக்கினான்.

பிறகு அவள், “சரி, என் கண்கள் தவறாகப் பார்த்திருக்க வேண்டும், அதனால் உங்கள் மீதுள்ள அன்பினால் நான் உங்களுடன் உடன்பட்டு நீங்கள் சொல்வதை ஏற்றுக் கொள்கிறேன்” என்றாள். அதோடு அந்த விஷயம் முடிந்துவிட்டது.

சில மாதங்களுக்குப் பிறகு, ஒரு நாள் அவள் அந்த இளைஞனிடம், “என் வீட்டின் அருகே எங்காவது ஒளிந்துகொள். நான் என் கணவனை என் வீட்டிலுள்ள உயர்ந்த மரத்தில் ஏறச் செய்கிறேன். அவன் உச்சியை அடைந்ததும், நீ திடீரென்று வந்து என்னுடன் விபச்சாரம் செய்துவிட்டு ஓடிவிடு” என்று கூறினாள்.

இவ்வாறு அனைத்தையும் ஏற்பாடு செய்த பிறகு, அவள் தன் கணவனுக்காக சுவையான உணவைத் தயாரித்தாள்.

மேலும், “நீ என்னை உண்மையாக நேசித்தால், இன்று இந்த மரத்திலிருந்து பேரீச்சைப் பழங்களை உன் கைகளாலேயே பறித்து எனக்கு ஊட்ட முடியுமா” என்று கேட்டாள். அதற்கு அவன் மகிழ்ச்சியுடன் சம்மதித்து, கயிறு போன்ற ஒன்றைப் பயன்படுத்தி அதில் ஏறினான்.

அவன் பழங்களை பறிக்கத் தொடங்கியபோது, அந்தப் பெண் அந்த இளைஞனுக்கு சைகை காட்ட, அவன் அவளுடன் விபச்சாரம் செய்யத் தொடங்கினான். கணவன் பேரீச்சைப் பழங்களை பறித்து முடித்ததும், கீழே ஒருவன் தன் மனைவியுடன் விபச்சாரத்தில் ஈடுபட்டிருப்பதைக் கண்டு கத்தி கூச்சலிடத் தொடங்கினான்.

அவன் தன் வேலையை முடித்தவுடன் ஓடிவிட்டான். அவன் கீழே இறங்கி வந்ததும், தன் மனைவியிடம், “உன்னுடன் விபச்சாரம் செய்தவன் யார் என்று சொல்?” என்று கேட்டான். அதற்கு அவள், “உனக்கு மனநிலை சரியில்லை போலிருக்கிறது”. இங்கே எந்த ஆணும் இல்லையே என்றாள்.

அதற்கு அவன், “நான் அந்தக் காட்சி முழுவதையும் என் கண்ணால் பார்த்தேன்” என்று சொன்னபோது, அந்தப் பெண், “ஆம், சில நாட்களுக்கு முன்பு நானும் இதே மரத்தில் ஏறியபோது, இதே போன்ற ஒரு காட்சியைக் கண்டேன், ஆனால் நான் உன் வார்த்தைகளை நம்பி உன்னை மதித்து என் கண்களை நம்பாமல் நீ கூறியதை ஏற்றுக் கொண்டேன்.” அது உனக்கு ஞாபகமிருக்கிறதா? என்று கேட்டாள்.

இந்த மரம் ஒரு சாபத்தால் பீடிக்கப்பட்டுள்ளது என்று நான் நினைக்கிறேன், அதனால் இதில் ஏறுபவர்கள் அனைவரும் அதே உணர்வைப் பெறுகிறார்கள். எனவே

நீயும் உன் கண்ணால் கண்டவற்றின் மீது தூசியைப் போட்டு விட்டு என் வார்த்தைகளை உண்மையென ஏற்றுக்கொள் என்றாள்.

அதன்படி அவனும் ஒப்புக்கொண்டான். அந்தப் பெண் தன் கணவனுடைய கண் முன்னே விபச்சாரம் செய்து அந்த இளைஞனின் சபதத்தை நடத்திக் காட்டி தன்னை உண்மையானவளாக நம்ப வைத்து விட்டாள்.

اِنَّ كَيْدَكُنَّ عَظِيْمٌ

**“உங்களுடைய சூழ்ச்சி மிகவும் பெரியது” என்று இதற்குத் தான் கூறுவார்கள்.**

**3. கனவு காண்பதற்கும் கட்டுப்பாடுகள் உண்டோ!**

ஒரு பெண் துர்குணம் கொண்டவளாக இருந்தாள். தன் இரகசியங்கள் அனைத்தையும் தன் தோழியிடம் கூறுவதை வழமையாக்கியிருந்தாள். அவளுடைய தோழி, மற்ற ஆண்களுடன் உறவு கொள்வது தடைசெய்யப்பட்டுள்ளது என்றும், பாவம் செய்வதை நிறுத்து என்றும் அவளிடம் பலமுறை விளக்கினாள். ஆனால் அவள் அதிலிருந்து விலகவில்லை. அதன்படி அவள் தவறு செய்யும் போதெல்லாம், அதன் விவரங்களை இவளிடம் கூறுவாள்.

ஒரு முறை அவளுடைய தோழி அவளுடைய கணவனிடம் இதைப் பற்றி சூசகமாகத் தெரிவித்து, அவள் வழிதவறிச் சென்று கொண்டிருக்கிறாள். எனவே அவள் விஷயத்தில் சற்று கண்காணிப்போடு இருக்குமாறு அறிவுறுத்தினாள்.

ஆனால் அவளோ மிகச் சிறந்த பேச்சாளியாகவும், தந்திரசாலியாகவும் இருந்ததால், தன்னைப் போன்ற

நல்லொழுக்கமுள்ள பெண் அரிதாகவே இருப்பாள் என்று தன் கணவனை நம்ப வைத்திருந்தாள்.

அவளுடைய தோழி பல முறை இவ்விஷயத்தை அவனிடம் கூறியபோது, “அவளின் வாய் மொழியாக இந்த விஷயத்தைக் கேட்டால் மட்டுமே நான் இதை நம்பமுடியும் என்றான். அதற்கு அவளின் தோழி, “சரி, நீ என் வீட்டிற்கு வந்து திரைக்குப் பின்னால் அமர்ந்து கொள். நான் உன் மனைவியிடம் முழு விஷயத்தையும் கேட்கிறேன். அவள் என்னிடம் சொல்லும்போது, நீயே அதை அறிந்து கொள்வாய்” என்றாள்.

அவனும் “சரி” என்று ஒப்புக் கொண்டு ஒரு நாள் அவளுடைய கணவனைத் திரைக்குப் பின்னால் மறைத்து வைத்துக் கொண்டு அவளிடம், “இன்று, உனக்குப் பழக்கமானவருடன் நீ என்ன செய்தாய் என்பதை விவரமாகச் சொல். உன் நேரத்தை எப்படிச் செலவிட்டாய்?” என்று கேட்டாள். அதற்கு அவள் ஒவ்வொரு விஷயத்தின் விவரங்களையும் மிகத் தெளிவாக அவளிடம் சொன்னாள்.

திடீரென்று திரைக்குப் பின்னாலிருந்த அவன் இலேசாக இருமினான். அதனால் திரைக்குப் பின்னால் யாரோ இருக்கிறார் என்ற சந்தேகம் அவளுக்கு வந்து விட்டது.

பிறகும் அவள் தன் கதையைத் தொடர்ந்தாள். இறுதியாக நடந்த சம்பவம் முழுவதையும் கூறி விட்டு “அதன்பிறகு என் கண்கள் திறந்து விட்டன” என்று கூறி முடித்தாள்.

இதற்கு என்ன அர்த்தம்? என்று அந்தத் தோழி கேட்டாள். அதற்கு அவள், “நான் உன்னிடம் ஒரு கனவைச் சொன்னேன். அதைப் பார்த்த பிறகு, என் கண்கள் திறந்து கொண்டன” என்றாள். இதற்கிடையில், அவன் திரைக்குப் பின்னாலிருந்து

வெளியே வந்து, "நீ சொன்னது உண்மையா?" என்று கேட்டான். அவள், "நிச்சயமாக இல்லை" என்றாள்.

இவை அனைத்தும் கனவுகளே! கனவுகள் எப்படி வேண்டுமானாலும் வரலாம். கனவு காண்பதினாலெல்லாம் அல்லாஹ் தண்டிக்க மாட்டான் என்றிருக்க "நீ எப்படி என்னை தண்டிக்க முடியும்?" இதைக் கேட்ட கணவன் மிகவும் வெட்கப்பட்டான். இவ்வாறாக அவள் தான் செய்த துரோகத்தையும் மீறி, தந்திரத்தால் தப்பித்து விட்டாள்.

**4. பேராசை பெருநஷ்டம்.**

"ஒரு பெண் கிராமத்திலிருந்து நகரத்திற்குச் செல்வதற்காக ஒரு குதிரை வண்டியில் ஏறினாள். செல்லும் வழியில், அந்த குதிரை வண்டி உரிமையாளரை அவனுடைய நண்பன் சந்தித்தான். அவன் தான் வாங்கிய கடன் தொகையில் இரண்டாயிரம் ரூபாயை அவனிடம் ஒப்படைத்தான். அவன் எந்தப் பையில் பணத்தை வைத்தான் என்பதை அவள் உற்று நோக்கினாள்.

அவர்கள் நகரத்தை அடைந்ததும், குதிரை வண்டி உரிமையாளர் அவளிடம், அழைத்து வந்ததற்கு வாடகையாக பத்து ரூபாய் கொடு என்றார். அதற்கு அவள் "நான் மீண்டும் ஊருக்குத் திரும்பிச் செல்ல வேண்டும். எனக்கு நீதிமன்றத்தில் ஒரு சிறிய வழக்கு இருக்கிறது. சற்று நேரம் காத்திருங்கள், திரும்பி வந்து விடுவேன். உங்களுக்கு மறு சவாரியும் என் மூலம் கிடைத்து விடும்" என்றாள். குதிரை வண்டி உரிமையாளரும் சரி என ஒப்புக்கொண்டார்.

பிறகு அவள் அவனிடம் "எனக்கு நீதிமன்றத்தில் ஒரு வழக்கு இருக்கிறது. நீ நீதிபதி முன் வந்து, "நான் உனக்கு

மூன்று முறை விவாகரத்து கொடுத்திருக்கிறேன்” என்று என்னைப் பார்த்துச் சொன்னால், நான் பயணக் கட்டணம் அல்லாமல், கூடுதலாக நூறு ரூபாயும் தருகிறேன்” என்றாள்.

அவனும் பணம் கிடைக்கும் என்ற பேராசையினால், நீதிமன்றத்திற்குச் சென்று நீதிபதியின் முன் அவள் கூறியது போன்றே வாக்குமூலம் கொடுத்தான். இதைக் கேட்ட அவள் அங்கேயே அழத் தொடங்கி விட்டாள். விவாகரத்து வார்த்தைகளைக் கூறிவிட்டு அவன் திரும்பிச் செல்லத் தொடங்கியபோது, அந்தப் பெண் நீதிபதியிடம், “இவன் என்னை விவாகரத்து செய்துவிட்டான்.

நீங்கள் எனக்கு ஜீவனாம்சமாக இரண்டாயிரம் ரூபாய் அவனிடமிருந்து வாங்கிக் கொடுக்க வேண்டும்” என்றாள். நீதிபதி அவனிடம், “இவளுக்கு இத்தா செலவிற்காக இரண்டாயிரம் ரூபாய் கொடு” என்றார்.

அதற்கு அவன், “இவள் என் மனைவி அல்ல என்றான். பேணத்தை பத்திரப்படுத்துவதற்காக இப்படிச் சொன்னாள் ஏற்க முடியாது” என்று அவள் கூறினாள். “நான் உன் மனைவியாக இருந்தவள். “உன்னைப் பற்றி எனக்கு எல்லாம் தெரியும். இதோ உன்னுடைய இந்தப் பையில் பணம் இருக்கிறது என்று கூறினாள். அவனைப் பரிசோதித்த போது, அவ்வாறே இரண்டாயிரம் ரூபாய் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.”

உடனே அவளுக்கு உரிய தொகையை வழங்குமாறு நீதிபதி மீண்டும் உத்தரவிட்டார். அவன் 2,000 ரூபாயைக் கொடுக்கத் தயங்கினான். ஆனால் அவள் வேகமாக அப்பணத்தைப் பறித்துக் கொண்டு சந்தைக்குள் மறைந்துவிட்டாள்.

ஹஜ்ரத் லுக்மான் அவர்கள் தம் மகனுக்கு இவ்வாறு அறிவுரை கூறினார்: "மகனே, ஒரு சிங்கத்தைப் பின்தொடர்வதை விட ஒரு பெண்ணைப் பின்தொடர்வது மிக ஆபத்தானது. ஏனெனில், சிங்கம் உன் பால் திரும்பினால் உன் உயிர் தான் பறிபோகும். ஆனால் ஒரு பெண் உன் பால் திரும்பினால், உன் ஈமான் பறிபோய்விடும்.

இது ஒரு ஞானியின் கூற்றாவது சங்கையான பெண்ணாக இருந்தால் கவனமாக இரு, மோசமான பெண்ணாக இருந்தால் தூர ஓடிவிடு.

**ஆண்களின் இயல்பு...;**

زُيِّنَ لِلنَّاسِ حُبُّ الشَّهَوَاتِ مِنَ النِّسَاءِ

"பெண்களைப் போன்ற விரும்பத்தக்க விஷயங்களின் மீதான அன்பு மக்களை மயக்கத்தில் ஆழ்த்தியுள்ளது" என்பது அல்லாஹ்வின் கூற்றாகும்.

ஒரு பெண்ணை அனுபவிப்பதின் மூலம் தனது இச்சையைத் தணித்துக்கொள்வது ஒரு ஆணுடைய மனதில் மறைந்திருக்கக்கூடிய மிகத் தீவிரமான ஆசையாகும் என்பதை இந்த வசனம் சுட்டிக்காட்டுகிறது.

நபி ﷺ அவர்களின் பின்வரும் புனித ஹதீஸூம் இதை உறுதிப்படுத்துகிறது.

مَا تَرَكْتُ بَعْدِيْ فِتْنَةً اَشَدُّ عَلَي الرِّجَالِ مِنَ النِّسَاءِ

**"எனக்குப் பிறகு என் உம்மத்திலுள்ள ஆண்களுக்கு பெண்களை விட வேறு பெரிய சோதனையை நான் விட்டுச் செல்லவில்லை" என்று கூறியுள்ளார்கள்.**

ஒரு பெண்ணின் மூலம் ஏற்படும் சோதனை எல்லாவற்றையும் விட ஆபத்தானதும், கடுமையானதும் ஆகும். இதனால்தான் ஷைத்தான், "ஒரு பெண் என் குறி தவறாத அம்பு" என்று கூறுகிறான்.

நபிகள் நாயகம் ﷺ அவர்கள் கூறினார்கள்:

اَلنِّسَاءُ حَبَائِلُ الشَّيَاطِيْنِ

"பெண்கள் ஷைத்தானின் வலைகளாக உள்ளனர்." ஒரு வேட்டைக்காரன் வலையினால் வேட்டைப் பிராணிகளைப் பிடிப்பது போல, ஷைத்தான் பெண்ணின் மூலம் ஒரு மனிதனைப் பாவத்தில் சிக்க வைத்துவிடுவான்

**சில முக்கியமான குறிப்புகள் பின்வருமாறு:**

**1. வாலிபர், வயோதிகர் எவருக்கும் வாய்ப்பளிக்காதே**

பெண்கள் அந்நிய ஆண்களிடமிருந்து எப்போதும் விலகி இருக்க வேண்டும். அவள் ஒரு அந்நிய ஆணை நம்பினால், நிச்சயமாக ஏமாற்றப்படுவாள். பெரும்பாலான ஆண்களுக்கு பாவம் செய்வதற்கான வாய்ப்பு கிடைக்காத காரணத்தினால் தான் பாவம் செய்யாமல் இருக்கின்றனர்.

ஒருவன் ஒரு பெண்ணின் மீது அதிகாரம் பெற்ற பிறகும் அவளோடு தவறு செய்யாமலிருந்தால், அவன் ஒன்று இறைநேசனாகவோ அல்லது முட்டாளாகவோ தான் இருப்பான். இது போன்ற சந்தர்ப்பத்தில் ஒரு சாதாரண மனிதனோ இச்சை மேலிட்டு கட்டாயம் பாவம் செய்துவிடுவான்.

இன்றைய காலகட்டத்தில், ஒரு வாலிப சகோதரி, தன் வாலிப சகோதரன் விஷயத்திலும் அலட்சியமாகக் கருதி அவனோடு தனிமையில் இருக்கக்கூடாது. சைத்தான்

அவர்களையும் சோதனையில் விழச் செய்து விடுவான் என்று நம் முன்னோர்கள் கூறியுள்ளனர். எப்போதும் பெண் என்பவள் ஆணின் மிகப்பெரிய பலவீனமே ஆவாள்.

### 2. ஆண்கள் வயோதிகமடைய மாட்டார்கள்.

பொதுவாக பெண் சம்பந்தப்பட்ட விஷயங்களில் ஒரு ஆண் தன்னை வயோதிகனாகக் கருதுவதில்லை. அத்துடன் அவனுடைய லட்சியங்களும், ஆசைகளும் எப்போதும் இளைஞர்களைப் போலவே வாலிபமாகவே இருக்கும்.

ஒரு இளம் பையனுக்குத் திருமணம் நடை பெறும்போது, அந்த சபையில் அமர்ந்திருக்கும் அவனது தந்தையும் தாத்தாவும், இது தங்களுடைய திருமண நிகழ்வாக இருந்திருக்கலாமே என்று தங்கள் மனதிற்குள் ஏங்குவதை அறியமுடியும்.

ஹஜ்ரத் அக்தாஸ் தானவி ﵀ அவர்கள் எழுதியுள்ளார்கள். சுமார் நூறு வயதைக் கடந்த ஒரு முதியவர் இருந்தார். ஒரு நாள், பெண்கள் தங்களுக்குள் அமர்ந்து, இன்ன முதியவர் சுமார் நூறு வயதைக் கடந்தவர் என்பதால், நாம் அவருக்கு முன் பர்தா அணிந்து முகத்தை மறைக்காமல் இருப்பதில் எந்த தவறுமில்லை என்று பேசிக்கொண்டிருந்தனர்.

ஹஜ்ரத் தானவி ﵀ அவர்கள் அவர்களின் பேச்சைக் கேட்டு விட்டு அவர்களிடம், சில நாட்களுக்கு முன்பு ஒரு நாள் நான் அவருடன் ஒரு இடத்தில் தங்கினேன்.

அன்றைய இரவில் தனக்கு ஒரு கனவு வந்ததாகவும், குளிப்பதற்குத் தண்ணீர் ஏற்பாடு செய்யுமாறும் அவர் தன்னுடைய வேலைக்காரனிடம் கூறியதை நான் அறிவேன் என்று கூறினார்கள். இதைக் கேட்டதும்,

அவர்கள் அனைவரும் பாம்பு கொட்டியது போல மௌனமாகிவிட்டனர்.

### 3. மனம் ஒருபோதும் நிரம்புவதில்லை.

பின்வரும் சில விஷயங்களில் ஒருவரின் மனம் எப்போதும் நிரம்பாது என்று அறிஞர்கள் எழுதியுள்ளனர். உதாரணமாக,

#### வானத்தைப் பார்ப்பதில்.

ஒவ்வொருவரும் தினந்தோறும் வானத்தைப் பார்க்கிறார்கள். அதில் தென்படும் நீல நிறம், மற்றும் படர்ந்திருக்கும் "மகங்கள், சூரியன், சந்திரன் மற்றும் நட்சத்திரங்கள் போன்றவற்றைப் பார்க்கிறார்கள். ஆனால் வானத்தைப் பார்ப்பதில் என் மனம் திருப்தி அடைந்து விட்டது. அதைப் பார்த்து, பார்த்து நான் சளித்து விட்டேன் என்று சொல்பவர் எவரும் இருக்க மாட்டார்.

மாறாக ஒவ்வொரு நாளும், ஒரு புது உற்சாகத்துடனே தான் வானிலுள்ள நட்சத்திரங்களை மக்கள் பார்க்கின்றனர்.

#### தண்ணீர் குடிப்பதில்..

ஒவ்வொரு நபரும் தினந்தோறும் தண்ணீர் குடிக்கிறார்கள். ஆனாலும், அவர்களுடைய உடல் ஒருபோதும் இத்தோடு நிறுத்திக் கொள்ளலாம் என்று திருப்தியடைவதில்லை. ஒரு நாளில் அவர் வயிறு முட்ட எவ்வளவு தண்ணீர் குடித்தாலும், அடுத்த நாள், தாகத்தின் தீவிரத்தால், தண்ணீருக்கான தேடல் ஏற்பட்டதே தீரும்.

சிலநேரம் ஒருவருக்கு செயற்கை பானங்கள் குடிப்பதில் வேண்டுமானால் சளிப்பு ஏற்படலாம். ஆனால் தண்ணீர் குடிப்பதில் ஒரு போதும் சளிப்பு ஏற்படாது.

## அல்லாஹ்வின் இல்லத்தைக் காண்பதில்...

அல்லாஹ்வின் இல்லத்தைக் காண்பதில் அல்லாஹ் அத்தகைய இன்பத்தை ஏற்படுத்தியுள்ளான். ஒருவன் அதை ஒருமுறை கண்டு விட்டால் போதும் அதை மீண்டும் காண விரும்புவான். காபாவை ஒரு முறை பார்த்தாலே மீண்டும் மீண்டும் பார்க்க வேண்டும் என்ற ஆசை ஏற்பட்டு விடும்.

يَزِيْدُكَ وَجْهَهُ حُسْنًا اِذَا مَا زِدْتَهُ نَظْرًا

*ஓ அன்பரே!, நான் உன்னை எவ்வளவு அதிகமாகப் பார்க்கிறேனோ, அவ்வளவு அதிகமாக உன் அன்பு எனக்குள் அதிகரிக்கிறது.*

என்று ஒரு கவிஞர் கூறியுள்ளார்.

## ஒரு ஆணுடைய மனம் பெண்ணுடைய விஷயத்தில்...

ஒரு ஆணின் மனம் பெண் விஷயத்தில் ஒருபோதும் திருப்தியடைவதில்லை என்பதும் ஒரு தெளிவான உண்மையாகும். அவனுக்கு அவளால் உடலியல் தேவை பூர்த்தியாக்கப்படுவதினால் தற்காலிகமாக திருப்தி உணரப்பட்டாலும் சரி, இரண்டு அல்லது நான்கு நாட்களுக்குப் பிறகு, மீண்டும் கூடுவதற்கான ஆசை இயல்பாகவே எழும். மேலும் அவளைச் சந்திக்காமல் அவனுக்கு நிம்மதியான உறக்கம் வராது.

ஒரு நபர் இளமையிலிருந்து முதுமையை நோக்கிச் சென்றாலும், பெண்ணின் மீதிருக்கும் ஈர்ப்பில் குறைவு ஏற்படுவதில்லை. உண்மையில் பசி, தாகம், உறக்கம் போல் பாலியல் தேவையும் மனித இயல்பின் ஒரு பகுதியாகும். அது ஒரு நபருடன் இறக்கும் வரை இருந்து கொண்டு தான் இருக்கும்.

**கூடல் இல்லையானாலும் தேடல் ஓய்வதில்லை.**

ஒரு பணக்காரர் தன் வாழ்நாள் முழுவதும் ஆடம்பரத்தில் கழித்து வந்தார். அவருக்கு முதுமை வந்தபோது, அவரால் எந்த பெண்ணுடன் பாலியல் உறவு கொள்ள இயலாமல் போனது. ஆனாலும், அவர் பெரும் தொகை கொடுத்து பாலியல் தொழில்முறைப் பெண்களைத் தன்னிடம் வரவழைப்பார். அவர்களோடு கட்டிப்பிடித்து சல்லாபம் செய்து விட்டு பிறகு அவர்களைத் திருப்பி அனுப்பிவிடுவார். அவர்களில்

ஒரு பெண், "உங்களால் எந்த பெண்ணுடன் உடலுறவு கொள்ள இயலாத நிலையில், இவ்வளவு பணம் கொடுத்து அவர்களை வரவழைப்பதில் உங்களுக்கு என்ன கிடைக்கிறது?" என்று அவரிடம் கேட்டாள். அதற்கு அவர், "என்னால் இயலாது என்றாலும், ஒரு பெண்ணை நிர்வாணமாகப் பார்ப்பதும், அவளது அந்தரங்க உறுப்புகளைத் தொடுவதும், மேலும் ஒன்றாகக் கட்டிப்பிடிப்பதும் என் ஆசையைத் தணிக்கிறது.

முதுமையால் என் உடலில் ஒரு வேலைநிறுத்தம் ஏற்பட்டுள்ளது. ஆனால் நான் பெண்களின் உறுப்புகளை ஆராய்வதிலேயே நேரத்தைக் கழிக்கிறேன் என்று கூறினார். அதாவது என்னால் உறவு கொள்ள முடியவில்லை என்றாலும் இதுவே என் மனதைத் திருப்திபடுத்துகிறது என்று கூறினார்.

ஒரு கவிஞருக்கு உணவு மற்றும் பானத்தின் மீது தீராத ஆசை இருந்தது. நான் கேள்விப்பட்டிருக்கிறேன் அவர் உணவு விரிப்பில் வைக்கப்பட்ட அனைத்து உணவுகளையும் சாப்பிட்டுச் சோர்வடைந்து விட்டார்.

அவருடைய மனைவி உணவு விரிப்பைச் சுத்தம் செய்ய வந்த போது, அவர்,

“என் கைகளில் அசைவில்லை என்றாலும், என் கண்களில் ஆசை உள்ளது.

மேதுவும், மாதுவும் அப்படியே என் முன்னாலே இருக்க விட்டு விடு” என்று கூறினார்.

இந்தக் கவிதை மேலே சொல்லப்பட்ட அந்தப் பணக்காரரின் நிலையைத் துல்லியமாக விவரிக்கிறது.

**கிடா சேர்க்கையைக் கண்டு களித்தல்:**

அல்லாமா திம்யரி ﵀ அவர்கள் ஹயாத் அல்-ஹய்வான் என்ற நூலில் எழுதியுள்ளதாவது: ஒரு முதியவர் ஆடுகளை மேய்த்துக்கொண்டு இருந்தார். அவர் ஒவ்வொரு நாளும் பல மணி நேரம் அமர்ந்து அந்த ஆடுகளைப் பார்த்துக்கொண்டே இருப்பார். யாரோ ஒருவர், “ஏன் உங்கள் நேரத்தை வீணடிக்கிறீர்கள்?” என்று கேட்டார்.

அதற்கு அவர், “முதுமையின் காரணமாக நானோ மனைவியோடு சேர முடியாதவனாகி விட்டேன். அதனால் நான் ஆடுகளை மேய்த்துக்கொண்டு நேரத்தைக் கழித்துக் கொண்டிருக்கிறேன். என் ஆடுகளில் ஒரு ஆடு மற்றொன்றின் மீது காமத்துடன் ஏறும் போது, எனக்கு என் இளமைக்காலம் நினைவை வரும். அதை எண்ணி இன்பமுற்றுக் கொண்டே நேரத்தைக் கழிக்கிறேன்” என்று பதிலளித்தார்.

**மக்கிய எலும்புகளிலும் ஈர்ப்புண்டு.**

இரண்டு மக்கிய எலும்புகள் ஓரிடத்தில் அருகருகே வைக்கப்பட்டாலும் அவை ஒன்று மற்றொண்டோடு

சேர முயற்சிக்கும் என்பதாக ஹஜ்ரத் உமர் அவர்கள் கூறியுள்ளார்கள்.

இந்த வாசகம் சம்பந்தமாக ஒருவர் விளக்கம் கேட்டபோது, ஒரு வயதான ஆணும், வயதான பெண்ணும் ஒன்றாக சேர்ந்திருக்க வாய்ப்பு கிடைத்தால், அவர்களும் ஒன்று சேர்ந்து விடுவார்கள் என்று கூறினார்கள்.

ஹஜ்ரத் சித்தீக்கி ﵀ அவர்களின் கூற்று : இறைநேசர் இமாம் முஹம்மது அப்துல் மாலிக் சித்தீக்கி ﵀அவர்கள், ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையிலான பரஸ்பர ஈர்ப்பைக் குறிப்பிடுகையில், ஒரு பெண்ணின் மீதான காமம் ஒரு ஆணுடைய மனதில் எந்த அளவிற்குப் பதிந்துள்ளது என்றால், ஒரு பெண் ஒரு பாதையில் நடந்து செல்லும் போது தரையில் அவளது காலடிகள் பதிந்த பின் அதே பாதையில் கடந்து செல்லும் மற்றொரு ஆணின் காலடிகள் அப் பெண்ணின் காலடிகளின் மீதுபட்டாலும் அந்த ஆணின் மனதில் அவனையே அறியாமல் பெண் பற்றிய காம உணர்வு எழுச்சி பெறும் என்று கூறியுள்ளார்கள்.

**மேலே கூறியவற்றின் சாராம்சம்....**

மேற்கண்ட உண்மைகளிலிருந்து, பெண் சம்பந்தப்பட்ட விஷயத்தில் ஒரு ஆணுடைய ஆசை எப்போதும் முற்று பெறுவதில்லை என்பது புலப்படுகிறது.

திருமணமான ஆண்களுக்கு மத்தியில் பொதுவாக பெண்ணைப் பற்றிய பேச்சுக்கள் பேசப்பட்டால் அங்குள்ள அனைவரும் மற்றொரு திருமணம் செய்துகொள்ளத் தயாராக இருப்பது போல் தெரியும்.

ஒரு பேராசிரியர் வீட்டில் அமர்ந்து நாவல் படித்துக் கொண்டிருந்தார். அவரது மனைவி அவருக்கு அருகில் சீவி சிங்காரித்துக் கொண்டு, கணவன் தன்னைப் பார்த்து பாராட்ட வேண்டும், தன் அழகை மெச்ச வேண்டும் என்று ஏங்கியபடி அமர்ந்திருந்தாள். ஆனால் அந்த பேராசிரியரோ அவளைக் கண்டுகொள்ளவே இல்லை. நீண்ட நேரம் காத்திருந்த பிறகு, அவள் அவருக்கு அருகில் வந்து, "நான் ஒரு புத்தகமாக இருந்திருந்தால், நீங்கள் என்னை மணிக்கணக்கில் பார்த்துக் கொண்டிருப்பீர்களல்லவா?"என்றாள்.

அதற்கு அந்த பேராசிரியர், "ஆம், நீ ஒரு டைரியாக இருந்திருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும். நான் அதை ஒவ்வொரு ஆண்டும் மாற்றிக் கொள்வேனே" என்றார்.

ஒரு ஆண் திருமணமாகாதவராக இருந்தாலும் சரி, திருமணமானவராக இருந்தாலும் சரி, மஹ்ரம் அல்லாத பெண்ணுடன் நெருங்கிப் பழக அனுமதிக்கப்படக்கூடாது என்பதை இது தெளிவுபடுத்துகிறது.

ஒரு இளைஞன் ரயிலில் பயணிப்பதற்காக ரயில்வே ஸ்டேஷனுக்கு வந்தான். அப்போது காத்திருப்பு அறையில், பர்தா அணிந்த ஒரு பெண்ணும் ரயிலின் வருகையை எதிர்பார்த்து அமர்ந்திருந்தாள். ஏதோ ஒரு காரணத்தால், வண்டி இரண்டு மணி நேரம் தாமதமாக வரும் என்று அறிவிப்பு செய்யப்பட்டது.

சும்மா உட்கார்ந்திருப்பதற்கு பதில், இந்தப் பெண்ணுடன் கொஞ்சம் அரட்டை அடிக்கலாம் என்ற எண்ணம் அவனுக்கு ஏற்பட்டது. முதலில், "நீங்களும் இந்த வண்டியில் ஏறத்தான் வந்திருக்கிறீர்களா?" என்று விசாரித்தான். அதற்கு அந்தப் பெண் ஆம் என்பதைப் போல் தலையசைத்தாள்.

அவனுக்கு சற்று தைரியம் ஏற்பட்டது. கூடவே தனிமையும் சேர்ந்துள்ளது. அந்தப் பெண்ணும் கேள்விக்குப் பதிலளிக்கிறாள். எனவே இன்னும் சிறிது நேரம் உரையாடலைத் தொடரலாமே என்று எண்ணினான். "நான் உங்களுக்குக் கொஞ்சம் பழச்சாறு அல்லது வேறு குளிர்பானம் ஏதும் வாங்கி வரட்டுமா?" என்று அவன் கேட்டான்.

முதலில் அந்தப் பெண் மறுத்தாள், ஆனால் மீண்டும் மீண்டும் அவன் வற்புறுத்திய பிறகு, அவள் ஒப்புக்கொண்டாள். உடனே அவன் ஓடிச் சென்று ஒரு குளிர்பானத்தை வாங்கி வந்தான். அவள் அதைக் குடித்து விட்டு ஒரு ஓரமாக வைத்துவிட்டாள். இன்னும் சிறிது நேரம் கழித்து, அவன், "நான் உங்களுக்குச் சாப்பாடு ஏதாவது வாங்கி வரட்டுமா?" என்று கேட்டான்.

அந்தப் பெண் வேண்டாம் என்று வேகமாக தலையசைத்து மறுத்தாள். அவன் மீண்டும் மீண்டும் வற்புறுத்தி கேட்டுக்கொண்டே இருந்தான். ஒரு புறம் வற்புறுத்தலும், மறுபுறம் மறுப்பும் தொடர்ந்தது. இப்படியே நீண்ட நேரம் கழிந்தது. இறுதியாக, ஒரு பழ வியாபாரி தன் கூடையுடன் தூரத்திலிருந்து அவனை நோக்கி வருவதைக் கண்டான். அவன் மிகவும் பரிவான தோரணையில் "நான் உங்களுக்கு ஒரு ஆப்பிளாவது வாங்கி வரட்டுமா?" என்று கேட்டான்.

அப்போதும் அவள் வேண்டாம் என்று தலையசைத்து மறுத்துவிட்டாள். இறுதியாக அவன் மிகவும் அன்பான தோரணையில், "என்ன விஷயம்? நீங்கள் என்னிடமிருந்து எதையும் ஏற்றுக்கொள்ள மறுக்கிறீர்களே" என்று கேட்டான். அவள் எதுவும் பேசாமல் மௌனமாகவே இருந்தாள். அதற்கு அவன், "ஏன் உங்களுக்கு இந்தப் பழத்தை சாப்பிட

விருப்பமில்லையா?" என்று கெஞ்சும் நிலைக்கு வந்து கேட்டபோது, அவள் நிர்பந்தத்திற்குள்ளாகி, "எனக்குப் பற்களே இல்லை. நான் ஏறத்தாழ எண்பது வயது நிரம்பிய மூதாட்டியாவேன்," என்று அவனிடம் சொன்னாள். அதைக் கேட்டவுடன் அவன் வெட்கப்பட்டு அங்கிருந்து நழுவிச் சென்று விட்டான்.

ஒருபுறம், பெண்கள் விஷயத்தில் ஆண்கள் மிகவும் பலவீனமாக இருக்கிறார்கள். மறுபுறம், ஒரு பெண்ணின் சிந்தனைகள் கெட்டு விட்டால் சூழ்ச்சி, குயிக்தியால் தன் கணவனுக்கும் தெரியாமல் எத்தனையோ தவறுகளை கச்சிதமாக அரங்கேற்றி விடுவாள். அதனால் குடும்ப மானம் சந்தி சிரிக்கும் நிலைக்கு சென்று விடும்.

இதனால்தான் ஆண்களும் பெண்களும் சுதந்திரமாகக் கலப்பதை இஸ்லாமிய ஷரீஅத் மிக ஆணித்தரமாக தடை செய்துள்ளது. அதன்மூலம், ஷைத்தானுக்கு அவர்களைப் பாவம் செய்ய வைக்க வாய்ப்பு கிடைக்காமலாகிவிடுவதோடு, எவருடைய மரியாதைக்கும் பங்கம் ஏற்படாதவாரும், மேலும் சமூகத்தில் சீர்கேடு பரவாதவாரும் பாதுகாக்கப்பு ஏற்பட்டு விடும்.

## இருபாலர் கலப்புக் கல்வியின் தீமைகள்

இன்று, பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் ஆண், பெண் இருபாலர் கலப்புக் கல்வி சகஜமாகி வருகிறது. அதன் தீய மற்றும் எதிர்மறையான விளைவுகளும் வெளிவரத் தொடங்கியுள்ளன.

وَ اِثْمُہُمَا اَكْبَرُ مِنْ نَفْعِہِمَا

அவற்றின் பாதிப்புகள் அவற்றால் ஏற்படும்

பயன்களை விட மிக அதிகம் என்பது அனுபவித்தினால் நிரூபணமாகிள்ளது.

**1. மஹ்ரம் அல்லாதவர்கள் [அந்நிய ஆண்கள்] பற்றிய தயக்கம் நீங்கிவிடும்.**

இருபாலர் கல்வி நிறுவனங்களில் பயிலும் மாணவர்களிடையே ஏற்படும் முதல் மற்றும் மிக அடிப்படையான மாற்றம் என்னவென்றால், மஹ்ரம் அல்லாதவர்களுடன் பேசுவதற்கான தயக்கம் நீங்கிவிட்டது. பெண் பிள்ளைகள் பேராசிரியர்கள் மற்றும் வகுப்புத் தோழர்களிடம் சகஜமாக பேச ஆரம்பித்து விடுகிறார்கள். வீட்டுப்பாடம் என்ற பெயரில், தொடங்கி உருப்படியில்லாத தேவையற்ற ஊர், உலக வெட்டிப் பேச்சுகள் உரையாடலின் தலைப்பாகி, பிறகு இது கொஞ்சம் வளர்ந்து தனிப்பட்ட வாழ்க்கையை சம்பந்தமாகவும் பேச ஆரம்பித்து விடுகின்றனர்.

ஷேக்ஷேவின் கூற்றுப்படி

*மறுமை நாள் பற்றிய பேச்சு வரும்போது,*

*உன் இளமை பற்றிய பேச்சும் ஊடே ஓட்டிக்கொள்கிறது.*

*இளமைப் பருவப் பேச்சுக்கள் தொடங்கிய பின்னர்*

*இரு தரப்பிலும் சமமாக நெருப்பு பற்றிக் கொள்கிறது.*

மஹ்ரம் அல்லாதவர்களிடம் பேசும்போது இயல்பாகவே தயக்கம், வெட்கம் ஏற்படுவது அல்லாஹ்வுடைய பெரிய அருட்கொடையாகும். இதன் காரணமாக, பாவத்தின் வாயில்கள் மூடப்பட்டிருக்கும். சாதாரண சூழ்நிலைகளில், ஒரு பெண் அந்நிய ஆணுடன் பேசும்போது, கூச்சத்தால்

அவளுடைய கண்கள் தாழ்ந்திருக்கும். ஆனால் கலப்பு கல்விச் சூழலில் வளர்ந்த ஒரு பெண் மஹ்ரம் அல்லாதவர்களிடம் பேசும் போது ஏற்பட வேண்டிய தயக்கம் இல்லாமலாகி அவள் தன் பார்வைகளைத் தாழ்த்துவதற்குப் பதிலாக, மற்றவரின் முகத்தைப் பார்த்துக் கொண்டிருப்பாள்.

மேலும், கண்கள் நான்கானால் (இருவரும் ஒருவரை யொருவர் பார்த்தால்) உள்ளம் ஊறுகாயைப் பார்த்தால் எச்சில் ஊறுவது போல் ஏங்க ஆரம்பித்து விடும்.

*நீங்கள் கதையை முதலில் தொடங்கவாவது செய்யுங்கள்.*

*அது இறுதியை தாமாக அடைந்து விடும்.*

என்று உள்ளம் விரும்பும்.

**2. நவ நாகரிக மோகம்.**

ஒரு பெண், மஹ்ரமல்லாத பலரின் ஏக்கப் பார்வைகள் தன் மீது படும்படியான சூழலில் வளரும்போது, மக்கள் தனது அழகினாலும் வசீகரத்தினாலும் கவரப்பட வேண்டும் என்று அவளுடைய உள்ளம் விரும்ப ஆரம்பிக்கும். மேலும் எல்லோரும் தன் அழகை மெச்ச வேண்டும் என்று தோன்றும். எனவே அவள் தான் சுவனக் கன்னி போல் தெரிய வேண்டும் என்று எந்நேரமும் தன்னை அலங்கரித்துக் கொண்டே இருப்பாள். பேசும்போது அவளுடைய குரலில் ஒரு வித கவர்ச்சியும், அவளுடைய நடையில் ஒரு வித வசீகரமும் தெரியும்.

கவிஞரின் கூற்றுப்படி,

*பார்ப்பவர்களைத் தான் மின்னல் தாக்குகிறது.*

*ஆனால் நீ வரும் இடமெல்லாமே தீயே பற்றிக் கொள்கிறது.*

இத்தகைய சூழலில், கல்வியில் கவனமில்லாமல் காட்சிப்படுத்துவதில் தான் கவனம் இருக்கும். உள்ளத்திலிருந்து இறை அச்சம் வெளியேறி, பாவத்தின் மீது வெறுப்பு கொள்வதற்கு பதிலாக பாவம் செய்வதற்கான வாய்ப்பு நழுவி விட்டதே என்ற ஏக்கம் உருவாகி விடும்.

இறுதியில் ஒரு மனிதன் தன்னாசை, பெண்ணாசை மற்றும் காம வேட்கையின் பல்வேறு வழிகளில் முன்னேற ஆரம்பிப்பான். இதற்கு நேர்மாறாக பெண்கள் நாகரிகத்தின் மீது பிரியம் கொள்பவர்களாக இருப்பார்கள். ஆக மொத்தம் இளைஞர்களும், இளைஞிகளும் இறை வழிபாட்டிலிருந்து விலகிச் சென்றிடுவார்கள்.

**3. சகஜமான நட்புறவுகள்.**

ஆண் பெண் கலப்புக் கல்வி நிறுவனங்களில் மாணவர்களிடையே முறையற்ற தொடர்புகள் பற்றிய நிகழ்வுகள் அனுதினமும் நடைபெறுகின்றன. இதனால் சைத்தானுக்கு வேலை மிக எளிதாகி விடுகிறது. பள்ளி மற்றும் கல்லூரிக்குச் சென்று வரும் நேரங்களில் அவர்களுக்கு மத்தியில் சந்திப்பிற்கான வாய்ப்புகளும் கிடைத்து விடுகின்றன.

ஒரு நகரத்தில் உள்ள ஒரு பெரிய சாலைக்கு சிக்ஸ் ரோடு என்று பெயரிடப்பட்டிருந்தது. ஆனால் மக்கள் அதை செக்ஸ் ரோடு என்றே அழைத்தனர். மாணவர்கள் தங்கள் வீடுகளுக்குச் சென்ற பிறகும் அவர்களுடைய பெண் தோழிகளுடன் மணிக்கணக்கில் தொலைபேசியில் பேசிக்கொள்கிறார்கள். அவர்கள் படுக்கையில் படுத்தபடியே தங்கள் செல்போன் வழியாகஒருவருக்கொருவர் குறுஞ் செய்திகளை அனுப்பிக்கொள்கிறார்கள்.

ஒரு மாணவன், தன் வகுப்புத் தோழியுடனான நட்பைக் குறிப்பிடுகையில், நாங்கள் இருவரும் மணிக்கணக்கில் தொலைபேசியில் பேசிக் கொள்வோம். ஒருமுறை நான் அவளிடம், நாளை நான் ஓட்டுநர் உரிமம் பெறத் தேர்வுக்குச் செல்ல வேண்டும் என்று சொன்னேன். அதற்கு அவள், முதலில் என்னிடம் தேர்வு கொடுத்து விட்டு செல் என்று கூறி போக்குவரத்து சிக்னலில் உனக்கு மிகவும் பிடித்த சொற்றொடர் எது என்று சொல் என்று கேட்டாள்.

நான் **(one way)** ஒரு வழிப் பாதை என்றேன். அவள் வேறு எந்த சொல் பிடிக்கும் என்று கேட்டாள். நான், **(wet and slippery)** ஈரமாகவும் வழுக்கலாகவும் இருத்தல் என்றேன். பிறகு, உனக்கு எந்தச் சொற்றொடர் மிகவும் பிடிக்கும் என்று நான் அவளிடம் கேட்டேன். அவள் **(no stopping)** “நிறுத்தாதே” என்ற வார்த்தை என்றாள்.

விஷயம் என்னவென்றால், நாங்கள் வெளிப்படையாக போக்குவரத்து சார்ந்த சொற்றொடரைப் பேசிக்கொண்டிருந்தோம், ஆனால் உண்மையில், ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையிலான பாலியல் உறவுகளின் செய்முறைகளை எங்களுக்குப் பிடித்தமான சொற்றொடர்களின் மூலம் ஒருவருக்கொருவர் சொல்லிக்கொண்டிருந்தோம் என்று கூறினான்.

### 4. பாலியல் முறைகேடுகள்

மேலை நாடுகளில் நிர்வாணக் கலாச்சாரம் உச்சத்தைத் தொட்டு விட்டது. ஆண் பெண் கலப்புக் கூட்டங்கள் அன்றாட வழமைகளாகிவிட்டன. பாலியல் முறைகேடுகள் அதன் முந்தைய சாதனைகளை முறியடித்து விட்டன.

# இதோ சில கசப்பான உண்மைகள் உங்களுக்கு முன்

**மூன்றாம் வகுப்பு மாணவன்......**

அங்கே அரசுப் பள்ளிகளில், மூன்றாம் வகுப்பு மாணவர்களுக்கு ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையிலான பாலியல் உறவுகள் பற்றிச் சொல்லித் தரத் தொடங்கிவிட்டனர். ஒரு முஸ்லிம் தாய் தொலைபேசியில், “எங்கள் குழந்தைகள் இங்கு படிக்கக்கூடிய பள்ளிகளில் முஸ்லிம் ஆசிரியர்களின் மேற்பார்வையின் கீழ் கல்வி கற்பவர்களாக இருந்திருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று அழுதுகொண்டே கூறினார்.

இன்று, என் மகன் பள்ளியிலிருந்து திரும்பி வந்து என்னிடம், “அம்மா, என் அப்பா உன்னுடன் உடலுறவு கொள்ளும்போது ஆணுறையைப் பயன்படுத்துவாரா?” என்று கேட்டான். அவனது வார்த்தைகள் என் உள்ளத்தை உலுக்கிவிட்டன. நான் என்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு கோபத்தை வெளிப்படுத்துவதற்குப் பதிலாக, அவனிடம், “எப்படி இந்தக் கேள்வியை கேட்க உனக்கு சிந்தனை தோன்றியது?” என்று அன்பாகக் கேட்டேன்.

பள்ளியில் இன்று மூன்றாம் வகுப்பு ஆசிரியர், எல்லாக் குழந்தைகளுக்கும் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையிலான பாலியல் உறவைப் பற்றிச் சொன்னார் என்று அவன் கூறினான். பிறகு, ஆணுறையை இரண்டு விரல்களில் நுழைத்து, இவ்விதமாக ஆணுறுப்பில் உபயோகித்து உறவு கொள்வதில் இரண்டு பலன்கள் உள்ளன என்ற செய்முறையில் செய்து காட்டி கூறினார் என்றான்.

முதலாவதாக, இதனால் பெண் கர்ப்பம் தரிக்க மாட்டாள். இரண்டாவதாக, ஒருவருக்கொருவர் பால்வினை நோய்கள் பரவுவது தடுக்கப்படும். அதற்குப் பிறகு, அந்த வகுப்பு முடிந்ததும், சிறுவர்களும் சிறுமிகளும் இது சம்பந்தமாக ஒருவருக்கொருவர் கேலி செய்து கொண்டனர்.

அதிலொரு சிறுமி தன் நண்பனான சிறுவனிடம், "ஆணுறை இல்லாமல் உன்னை எதுவும் செய்ய விடமாட்டேன்" என்று சொல்லிக் கொண்டிருந்தாள். அதற்கு அந்தச் சிறுவன், "நான் வீட்டிலிருந்து ஒரு ஆணுறையைத் திருடிக் கொண்டு வருவேன். பிறகு நாம் எப்படியாவது பரிசோதனை செய்து பார்ப்போம் என்று பதிலளித்தான். அங்கு இருந்த எல்லா சிறுவர் சிறுமிகளும் இதைக் கேட்டு உரக்கச் சிரித்தார்கள் என்று அந்த சிறுவன் தன் தாயிடம் கூறினான்.

### 5. வெட்கத்தை வேரறுக்கும் திட்டம்.

மேற்கத்தியர்களின் கூற்றுப்படி, கூச்சம் என்பது ஒரு நல்ல குணம் அல்ல. அது ஒரு நோயாகும். அதை ஒழிப்பதற்காக, எங்களிடம் ஆரம்ப வகுப்புகளில் சிறுவர்களும், சிறுமிகளும் அருகருகே இருக்கும் இருக்கைகளில் அமர வைக்கப்படுகிறார்கள்.

ஒவ்வொரு சிறுமியின் இருபுறமும் சிறுவர்களும், ஒவ்வொரு சிறுவனின் இருபுறமும் சிறுமிகளும் இருக்கும்படி பதிவு எண்கள் தரப்படுகின்றன. சிறுவர்களும் சிறுமிகளும் ஒருவருக்கொருவர் வெளிப்படையாகப் பேசுகிறார்களா, மற்றும் தங்களுக்குள் கேலி, கிண்டல் செய்து கொள்கிறார்களா என்பதைக் கவனிப்பதும் ஆசிரியரின் முக்கிய கடமையாகும்.

ஒருவேளை ஒரு சிறுமி மற்ற சிறுவர்களிடமிருந்து விலகி தனித்திருந்தால், அவ்வாறு செய்வது முறையல்ல என்று ஆசிரியர் அவளுக்கு புத்தமதி கூற வேண்டும். அப்போதும் அவளுக்கு புரியவில்லை என்றால், ஒரு திறமையான உளவியலாளர் வரவழைக்கப்பட்டு, இவள் ஏன் இயல்பாக இருப்பதில்லை என்று பரிசோதிக்கப்படுவாள்.

மாதத்திற்கு ஒருமுறை அல்லது இருமுறை நீச்சல் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படும். அதில் சிறுவர், சிறுமியர் தங்களுடைய ஆடைகள் அனைத்தையும் கழற்றிவிட்டு குளிக்குமாறு பணிக்கப்படுவார்கள். நாங்கள் நீச்சல் குளத்தில் குளித்துக் கொண்டிருந்தபோது, சிறுவர், சிறுமியர் ஒருவர் மற்றவரின் அந்தரங்க உறுப்புகளை உற்றுப் பார்த்துக் கொண்டிருப்பார்கள் என்று ஒரு சிறுவன் தன் தாயிடம் கூறினான்.

இன்னும் சில குறும்புக்காரப் பையன்கள் தங்கள் அந்தரங்க உறுப்புகளை மற்றவர்களுக்கு பகிரங்கமாக காட்டி விளையாடிக் கொண்டும் இருப்பார்கள். இவையெல்லாம், பையன்களுக்கும் பெண்களுக்கும் இடையேயான தயக்கத்தைப் போக்குவதற்காக, அதாவது வெட்கத்தை வேறருப்பதற்காக செய்யப்படுகின்றன.

இதற்கு அடுத்த வகுப்பில் படிக்கும் மாணவர்களுக்கு சற்று கூடுதலாக பாலியல் உறவுகள் பற்றிய திரைப்படம் காட்டப்படும். இதன் மூலம் ஆணும், பெண்ணும் உடலுறவு கொள்ளும் முறை என்ன என்பதை அவர்கள் நன்கு அறிந்து கொள்ள வேண்டும் என்பது நோக்கமாகும்.

முஸ்லிம் பெற்றோர்கள், “எங்கள் பிள்ளைக்கு இந்த வகுப்பின் அவசியம் தற்போது இல்லை. உரிய நேரத்தில் நாங்களே, குடும்ப வாழ்க்கை பற்றிய வழிகாட்டல்களை

அவனுக்குச் சொல்லிக் கொள்வோம்" என்று பள்ளி முதல்வருக்கு விண்ணப்பம் எழுதினால், அத்தகைய சூழ்நிலையில், அந்தப் பையன் மட்டும் வகுப்பிலிருந்து விலக்களிக்கப்படுவான்.

ஆனால் அடுத்த பாடவேளையில், அவனோடு படிக்கும் சக நண்பர்கள் தங்கள் கண்களால் கண்டதை அந்த சிறுவனிடம் கட்டாயம் சொல்வார்கள். ஆக அந்த மாணவன் அசிங்கமான காட்சிகளைப் பார்க்கவில்லை என்றாலும், நிச்சயமாக அவன் பிறர் வழியாக அதைக் கேட்பான். பின்னர் அவன் செவியுற்ற காட்சிகள் அனைத்தையும் தனிமையில் தன் மனக் கண்களின் முன் கொண்டு வந்து இன்பம் பெறுவான்.

நுண்கலைப் பிரிவில் படிக்கும் மாணவர் ஒருவர் கூறினார், "நாங்கள் கல்லூரியில் சேர்ந்தபோது, எங்களுடைய பிரிவில் படிக்கக்கூடிய மாணவர்களுக்கு தொடக்கமாக ஓவியக் கோட்பாடுகள் கற்பிக்கப்பட்டன. பிறகு ஒரு நாள், செய்முறைப் பயிற்சிக்காக, வகுப்பு மாணவர்கள் அனைவரும் ஒரு பெரிய கூடத்தில் ஒன்று திரட்டப்பட்டனர். ஒவ்வொருவரும் அவரவர்களின் திறமைகளை வெளிப்படுத்த ஒரு படம் வரைய வேண்டும். எனவே எல்லோரும் தங்கள் கைகளில் வரைபடத் தாள், மேலும் ரப்பர், பென்சிலை எடுத்துக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டனர்.

ஊதியம் பெற்றுக் கொண்டு என்ன வேலை வேண்டுமானாலும் செய்வேன் என்ற நிலையில் உள்ள ஒரு பெண் அவ்விடத்திற்கு வரவழைக்கப்பட்டிருந்தாள். வகுப்பிலுள்ள அனைவருக்கும் முன்னால் அவள் தன் ஆடைகளைக் களைந்தாள். பின்னர் அவள் ஒரு பெரிய மேஜையில் ஒரு வித்தியாசமான நிலையில் படுத்துக்

கொண்டாள். அனைத்து மாணவர்களிடமும் அவளை அப்படியே படம் வரையுமாறு கூறப்பட்டது.

சுமார் இரண்டு மணி நேரம் மாணவர்கள் அந்தப் பெண்ணின் உடல் பாகங்களை அளந்து அளந்து வரைபடத் தாளில் அவளது படத்தை வரைந்தனர். இந்தப் படம் அவளுடைய அந்தரங்க பாகங்களின் முடிகள்கூட துல்லியமாக தெரியும் விதத்தில் வரையப்பட்டிருந்தது. அவ்விடங்களில் இருக்கும் வர்ணச் சாயலும் கூட அதில் கவனிக்கப்பட்டிருந்தது.

வகுப்பு நேரம் முடிந்ததும், அனைத்து மாணவ, மாணவியர்களுடன் அமர்ந்து அவள் தேநீர் அருந்தினாள். பிறகு நிர்வாகத்தின் தரப்பிலிருந்து இதற்காக அவளுக்கு அன்பளிப்புகளும், ஊதியமும் வழங்கப்பட்டது. அந்தப் பெண்ணின் நிர்வாணத் தோற்றம் அந்த சொற்ப நேர வகுப்பு முடிந்த பின்பும் அவர்கள் மனதில் ஆழமாகப் பதிந்திருக்கும். அது எவ்வளவு காலம் அவர்களின் சிந்தனையில் பதிந்திருந்தது என்பதை யாரால் சொல்ல முடியும்

பல சமயங்களில் பல்கலைக்கழக மாணவ, மாணவியர்களுக்கு தயக்கம், கூச்சம் இல்லாமல் பல விஷயங்களை சந்திக்க பழக வேண்டும். மேலும் பெற்றோருடைய ஆலோசனைப் படியே எதையும் செய்ய வேண்டும் என்பதை நீக்கி சுதந்திரமாக தாமே எல்லாவற்றையும் செய்யப் பழக வேண்டும் என்பதற்காக ஊரிலிருந்து வெகு தொலைவில் இருக்கும் பல்கலைக்கழகங்களில் அவர்களைச் சேர்க்கப்படுகிறது.

பொதுவாக அங்குள்ள விடுதிகளில் தங்கும் ஆண், பெண் பிள்ளைகள் எல்லோரும் ஒரு பெரிய அறையில்

ஒன்றாகவே தங்க வைக்கப்படுகிறார்கள். இரவும் பகலும் ஒன்றாக இருப்பதால், அவர்களுக்கு மத்தியில் இயல்பாகவே நட்பு உருவாகிவிடுறது. மேலும் அவ்விடங்களில் மாணவ, மாணவியர்களின் கழிப்பறைகளும் கூட ஒன்றாகவே அமைக்கப்பட்டுள்ளன. ஒரு பெண் குளிக்கச் செல்லும்போது, ஒரு பையன் வாசலில் காத்திருக்கிறான்.

குறும்புக்கார மாணவர்கள் அடிக்கடி கழிப்பறைக் கதவுகளின் பூட்டுக்களை உடைத்துவிடுவதாகவும் சில முஸ்லிம் மாணவர்கள் கூறுகின்றனர். அதனால் சில நேரம் கதவுகள் திறந்தே இருக்கும். ஒரு பெண் குளித்துக் கொண்டிருக்கும்போது, அங்கு வரக்கூடிய மாணவர்கள் குளியலறைக் கதவைத் திறந்து அவளது நிர்வாண உடலைப் பார்ப்பதும் நடக்கிறது.

பிறகு தங்கும் அறையில் அனைவரும் ஒன்றாக இருக்கும்போது, அவர்கள் பார்த்த பெண்களின் உடல் பாகங்கள் குறித்து தங்களுடைய சொந்தக் கருத்துக்களை வெளிப்படுத்துகிறார்கள். இதற்கும் கல்விக்கும் என்ன சம்பந்தம்? தங்கள் கலாச்சாரத்தின் அசுத்தமான விளைவுகளை மாணவர்களின் உள்ளங்களிலும், மனங்களிலும் குத்துவதற்காகவே இவை அனைத்தும் செய்யப்படுகின்றன. பெரும்பாலான மாணவ, மாணவியர்கள் பரஸ்பர சம்மதத்துடன் ஒருவருக்கொருவர் உடலுறவும் கொள்கிறார்கள்.

கல்விக்கு இடையூறு ஏற்பட்டுவிடும் என்ற அச்சம் இருந்தால், கர்ப்பத்தைத் தவிர்க்க போதுமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும். பல்கலைக்கழக மாணவிகளின் கைப்பைகளில் எப்போதும் கருத்தடை மாத்திரைகள் கைவசம் இருக்கும்.

அங்கு படிக்கக்கூடிய ஒரு மாணவியின் கைப்பையில் ஆணுறை ஒன்று இருந்தது. ஆசிரியர் வகுப்பிற்கு வராத இடைவெளியில் அவளுடைய தோழி அதை வகுப்பு மாணவர்கள் அனைவருக்கும் முன்னால் எடுத்து அசைத்துக் காட்டிக் கொண்டிருந்தாள்.

வெளிநாட்டு கல்வி நிறுவனங்களில் பயிலக்கூடிய நம்முடைய பிள்ளைகள் எவ்வாறு கல்வி கற்கிறார்கள் என்பதை அறிந்து கொள்வதற்கும், இதனால் பெற்றோர்கள் பிற்காலத்தில் எவ்விளைவுகளை சந்திக்க இருக்கிறார்கள் என்பதை முஸ்லிம் பெற்றோர்கள் புரிந்துகொள்வதற்காகவுமே இவ்விஷயங்கள் அனைத்தும் சற்று விலாவாரியாக எழுதப்பட்டுள்ளன.

## நூறு வருங்கால மனைவிகள்

ஒருமுறை, ஸ்வீடனில் உள்ள ஒரு கல்லூரியில் சொற்பொழிவாற்றும் வாய்ப்பு அடியேனுக்குக் கிடைத்தது. அந்தச் சொற்பொழிவின் தலைப்பு, “மனித உரிமைகள் குறித்த இஸ்லாமியக் கண்ணோட்டம்” என்பதாகும்.

விரிவுரையின் தொடக்கத்தில் அறிவியல் பாடப்பிரிவின் அனைத்து மாணவர்களும் அவசியம் வருவார்கள். ஆனால் அவர்களுக்குச் சொற்பொழிவில் ஆர்வமிருந்தால், அவர்கள் அமர்ந்திருப்பார்கள், இல்லையென்றால் எழுந்து சென்றுவிடுவார்கள். அவர்களை செல்ல வேண்டாம் என்று நிறுத்தும்படி நம்மால் கட்டாயப்படுத்த முடியாது என்று முதல்வர் கூறினார்.

சொற்பொழிவு தொடங்கியதும், நான் என்னுடைய தலைப்பை பீடிகை எதுவுமில்லாமல் தெளிவான முறையில் விளக்கத் தொடங்கினேன். அல்லாஹ்விற்கே எல்லா

புகழும்! மாணவர்கள் எழுந்து செல்வது ஒரு புறம் இருக்கட்டும் மற்ற வகுப்புகளைச் சேர்ந்த மாணவர்களும், ஆசிரியர்களும் கூட அந்த அறையில் வந்து அமர ஆரம்பித்தனர். எனவே கூடுதலான நாற்காலிகள் போட வேண்டிய நிலை உண்டானது. சொற்பொழிவு முடிந்ததும், கேள்வி-பதில் அமர்வு தொடங்கியது.

ஒரு வாலிபன் எழுந்து "இஸ்லாம் நான்கு திருமணங்களை அனுமதித்திருக்கும்போது, நீங்கள் மனித உரிமைகளைப் பற்றிப் பேச வேண்டுமா ? என்று ஒரு கேள்வியைக் கேட்டான்.

ஒவ்வொருவரும் தங்கள் சூழ்நிலைகளின் தேவைகளின் அடிப்படையில் பொருத்தமான முடிவை எடுக்க வேண்டும் என்பதற்காகவே இஸ்லாம் நான்கு திருமணங்களை அனுமதித்துள்ளது என்று அடியேன் விளக்கமளித்தேன். இதற்கான உதாரணங்கள் முன்வைக்கப்பட்டபோது, அங்கிருந்தவர்கள் திருப்தியடைந்து அடுத்த கேள்விக்கு பதிலளிக்குமாறு வேண்டினர்.

அப்போது நான் அந்த இளைஞனிடம் இந்த பதிலால் நீ, திருப்தியடைந்து விட்டாயா? என்று கேட்டேன். அதற்கு அவன் ஆம் என்று சொன்னான். பிறகு அவனிடம் நான் உன்னிடம் ஒரு சிறிய கேள்வி கேட்கலாமா என்று கேட்டேன். ஆம் தாராளமாக கேட்கலாம் என்று சொன்னான். உன்னுடைய இந்த சுற்றுச் சூழலில் ஒரு இளைஞன் திருமணத்திற்கு முன்பு எத்தனை பெண்களுடன் பாலியல் உறவு கொண்டு பயிற்சி மேற்கொள்வான் என்று கேட்டேன். அவன், உண்மையைச் சொல்லவா என்றான். ஆம், நானும் உண்மையைத் தெரிந்து கொள்ளத் தான் கேட்கிறேன் என்று கூறினேன்.

பள்ளி, கல்லூரி, பல்கலைக்கழகம், மற்றும் இரவு விடுதி என்று அனைத்தையும் சேர்த்து கணக்கிட்டால், குறைந்தது நூறு பெண்களுடனாவது பாலியல் உறவு கொண்ட அனுபவத்தைப் பெற்றிருப்பான் என்று அவன் பதிலளித்தான். இதைக் கேட்டு வகுப்பிலிருந்த மாணவர்கள் அனைவரும் சப்தமிட்டு சிரித்தனர்

## பெண்கள் பேருந்துகள் போன்றவர்கள்

ஒரு தொழிற்சாலையில் நீராவி கொதிகலனைப் பொருத்துவதற்காக பிரான்சிலிருந்து ஒரு பொறியாளர் வந்திருந்தார். அந்த வேலையை முடிக்க ஏறத்தாழ இரண்டு மாதங்கள் ஆனது. ஒரு சில நாட்களுக்குள், அந்த பிரெஞ்சு பொறியாளர் உள்ளூர் பொறியாளர்களுடன் சகஜமாக பழகி, வெளிப்படையாகப் பேசத் தொடங்கினார். இரண்டு வாரங்களுக்குப் பிறகு, எந்தப் பெண்ணும் உடன் இல்லாமல் இரவில் தன்னால் தனியாகத் தூங்க முடியவில்லை என்று அவர் சொல்ல ஆரம்பித்தார்.

இது ஒரு இஸ்லாமிய நாடு என்று அவருக்கு விளக்கப்பட்டது. எனவே விபச்சாரத்திற்குத் தேவையான பெண்கள் இங்கு எளிதில் கிடைக்கமாட்டார்கள். அப்படியானால் இது ஒரு பெரிய சிரமமான விஷயமே என்று அவர் கூறினார். எனவே, அவர் தன்னுடன் கொண்டு வந்திருந்த ஆபாசப் படக் காட்சிகளைப் பார்த்து நேரத்தைக் கழிக்கத் தொடங்கினார்.

வேலை முடிந்து, அவர் புறப்படும் நாள் நெருங்கியபோது, ஒரு பொறியாளர் அவரிடம், உன்னுடைய காதலி இன்னும் உனக்காகக் காத்திருப்பாளா?. இந்த இரண்டு மாதங்களில் அவள் வேறு யார் மீதாவது காதல் கொண்டிருக்க

வாய்ப்புள்ளதா? என்று கேட்டார். அதற்கு அந்த பிரெஞ்சு பொறியாளர்,

In our country women are like buses if you miss one take an other one

“எங்கள் நாட்டில் பெண்கள் பேருந்துகளைப் போன்றவர்கள். ஒன்றில் பயணிக்க முடியாவிட்டால், பயணிக்க இன்னொரு பேருந்தைப் பெற்றுக்கொள்ளலாம்” என்று பதிலளித்தார்.

## மாடுகளை வளர்க்க வேண்டிய அவசியம் என்ன?

ஒருமுறை, ஒரு தொழிற்சாலையில் ஏதோவொரு திட்டத்தை வடிவமைப்பதற்காக ஒரு பொறியாளர் லண்டனிலிருந்து வந்திருந்தார். அங்கு அவர் தங்கியிருந்த இரண்டு வாரங்களில், உள்ளூர் பொறியாளருடன் அவருக்கு நல்ல பழக்கம் ஏற்பட்டுவிட்டது. இருவரும் ஒன்றாக இணைந்து வேலை செய்து வந்தனர். ஒருநாள், அவர் உள்ளூர் பொறியாளரிடம் உனக்கு எத்தனை குழந்தைகள் உள்ளனர் என்று கேட்டார். அதற்கு அவர் மூன்று குழந்தைகள் உள்ளனர் என்று கூறினார்.

பிறகு உள்ளூர் பொறியாளர் அவரிடம் உனக்கு எத்தனை குழந்தைகள் உள்ளனர் என்று கேட்டார். அவர் யாருமில்லை என்றார். மீண்டும் அவர் ஏன் என்ன காரணம்? என்று கேட்டார். அவர், “எனக்கு இன்னும் திருமணம் ஆகவில்லை” என்று கூறினார். “சரி, உங்களுக்கு வயது என்ன?” என்று அந்த உள்ளூர் பொறியாளர் கேட்டார். அவர், “52 வயது” என்றார்.

"நீங்கள் படித்திருக்கிறீர்கள், நல்ல வேலையில் இருக்கிறீர்கள், நிறைய சம்பாதிக்கிறீர்கள். பிறகு இவ்வளவு வயதாகியும் திருமணம் செய்து கொள்ளாமல் தாமதம் செய்வதற்கு என்ன காரணம்?" என்று கேட்டார். அவர் புன்னகைத்து விட்டு

If you can get milk from market there is no need to keep a cow in the house

"சந்தையிலிருந்து உங்களுக்கு தினந்தோறும் புத்தம் புதிய பால் கிடைத்துக் கொண்டிருக்கும் போது, வீட்டில் மாடுகளை வளர்க்க வேண்டிய அவசியம் என்ன?" என்று கூறினார்.

வேறு வார்த்தைகளில் சொல்வதானால், "விபச்சாரத்திற்காக இளம் பெண்களை எளிதில் பெற முடியும் என்று இருக்கும் போது, வீட்டில் ஒரு மனைவி இருப்பதில் என்ன பயன்?" என்று அவர் கூற விரும்பினார். ஒவ்வொரு நாளும் அதே பழைய முகத்தைப் பார்த்துக் கொண்டே இருப்பதில் சளிப்பு ஏற்பட்டு விடுமல்லவா! என்று கூறினார்

## கூட்டு விபச்சாரக் கொண்டாட்டங்கள்

ஐரோப்பிய நாடுகளில், திருமண மகிழ்ச்சியைக் கொண்டாட பெரும்பாலும் ஒரு பெரிய மண்டபம் வாடகைக்கு எடுக்கப்படுகிறது. முதலில், உணவும் பானமும் பரிமாறப்படும். பின்னர் நடனம் மற்றும் பொழுதுபோக்கு கச்சேரிகள் அறங்கேற்றப்படும். அதற்குப் பிறகு, மது அருந்திய போதையில், கூட்டாகப் புணர்ச்சி செய்யப்படுகிறது. அறையில் ஆண்களின் எண்ணிக்கைக்குச் சமமான அளவு பெண்கள் இருப்பார்கள். ஒவ்வொரு

ஆணுக்கும் பெண்ணுக்கும் உடலுறவுக்காகத் தாங்கள் விரும்பும் நபரைத் தேர்ந்தெடுக்கும் உரிமை உண்டு.

அந்த நேரத்தில் விளக்குகளை அணைப்பதைக் கூட பெரிதாக பொருட்படுத்திக் கொள்ளப்படுவதில்லை என்று ஒருவர் கூறினார். ஒவ்வொரு ஜோடியும் தங்கள் இச்சைக்கு விருந்தளிப்பதில் மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டிருப்பார்கள். பிறர் பார்ப்பாரே என்ற எண்ணம் கூட இருப்பதில்லை.

சிலர் வாடகைக்கு படகுகளை எடுத்து, அசூசையான பாவ காரியங்களை கடலில் மிதந்து கொண்டிருக்கும் அப்படகுகளில் நடத்துகிறார்கள். அதற்காக அழைப்பிதழ்கள் வேறு பிரத்தியேகமாக விநியோகிக்கப்படுகின்றன. அதில் பங்கேற்கும் ஒவ்வொரு ஆண், பெண்ணிடம் நுழைவு அனுமதிச் சீட்டைப் போன்று அவசியம் அவ்வழைப்பிதழ் இருக்க வேண்டும்.

## வன் புணர்வுகளின் தறிகெட்ட போக்கு

ஐரோப்பிய நாடுகளில், விபச்சாரம் செய்பவர்களுக்கு பெண்கள் கிடைப்பது சிரமமான காரியமல்ல. அதற்கென பெண்கள் எப்போதும் தயாராக இருப்பார்கள்.

சில வாலிபர்களுக்கு இதில் அவ்வளவாக விருப்பமில்லை. நாம் தீய செயல்களைச் செய்ய நாடினால் அவர்கள் வேண்டாம் என்று மறுக்க வேண்டும், மேலும் தடை போட வேண்டும். அதன் பிறகும் நாம் கட்டாயப்படுத்தி அவர்களோடு வன் புணர்வு மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறான உறவுகளையே அவர்கள் விரும்புகின்றனர். இதில் தான் கூடுதல் சுவாரஸ்யம் உள்ளதாக எண்ணுகின்றனர்.

இவ்வாறாக, அவர்கள் கட்டாயப் புணர்ச்சிகளை பரவலாக்கியுள்ளனர்.

ஒரு செய்தித்தாளில் வந்த தகவலின் படி ஒரு கணவன், தனது மூன்று நண்பர்களுடன் சேர்ந்து, நள்ளிரவில் உறங்கிக் கொண்டிருந்த தன் மனைவியைப் பாலியல் வன்கொடுமை செய்துள்ளான். இருளாக இருந்ததால், அந்தப் பெண்ணால் மற்ற ஆண்களை அடையாளம் காண முடியவில்லை. ஆனால் அவர்களில் ஒருவரான அவளுடைய கணவன் அவளை முத்தமிடத் தொடங்கியபோது, அவள் அவனை அடையாளம் கண்டுகொண்டாள்.

மறு நாள் காலையில், அந்தப் பெண்ணின் புகாரின் பேரில் அவளுடைய கணவன் கைது செய்யப்பட்டான். அப்போது தான் கேவலமான இக் காரியத்தின் முழு உண்மையும் வெளிவந்தது. காவல்துறையினர் கணவனிடம், "உன் மனைவியுடன் உடலுறவு கொள்வதற்கு உனக்கு எந்தத் தடையும் இல்லாதபோது, ஏன் இவ்வாறு பலவந்தம் செய்தாய்?" என்று கேட்டனர்.

கட்டாயப்படுத்தி உறவு கொள்வதில் அலாதியான இன்பம் இருக்கிறது என்று அவன் கூறினான். நாங்கள் நால்வரும், யாருடைய மனைவி அதிகத் தடை விதிக்கிறாள். மேலும் யாருடைய மனைவி எந்த குறுக்கீடுகள் செய்யவில்லை என்பதை அறிவதற்காக ஒருவர் பின் ஒருவராக பிறருடைய வீடுகளுக்குச் சென்று மற்றவர்களின் மனைவிகளைப் பாலியல் வன்புணர்வு செய்ய ஒரு திட்டத்தை வகுத்தோம்.

என் மனைவி மட்டும் எங்களுக்குக் கட்டுப்படாமல் எங்களை அவள் போலிஸில் சிக்க வைத்துவிட்டாள் என்று கூறினான்.

## நாயுடன் தகாத உறவு

ஒரு பெண் தன் வீட்டில் ஒரு நாய் வளர்த்து வந்தாள். அவளுடைய கணவன், "என் மனைவி இரவில் என்னுடன் உறங்குவதற்குப் பதிலாக, நாயுடன் மற்றொரு அறையில் உறங்குகிறாள். நான் தனியாக உறங்குவதில் எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை".

இருப்பினும், நான் இல்லாத நேரத்தில் அவள் நாயுடன் உடலுறவு கொள்வதைத் தான் என்னால் சகிக்க முடிய வில்லை என்று ஒரு வழக்குப் பதிவு செய்தான். அந்தப் பெண்ணிடம் கேட்டபோது, "ஆம், நாய் எவ்வளவு நேரம் உடலுறவில் தாக்குப் பிடிக்குமோ அந்தளவு ஒரு ஆண் தன் மனைவியுடன் தாக்குப் பிடிக்க முடியாது. நான் இந்த நாயுடன் சேரும் போது மிகவும் திருப்தி அடைகிறேன்.

எனவே இவன் என்னை விவாகரத்து செய்ய நாடினால் தாராளமாக விவாகரத்து செய்து கொள்ளலாம். என்னால் என் கணவரை விட்டுப் பிரிய முடியும், ஆனால் என் நாயை விட்டு பிரிய முடியாது" என்று பதிலளித்தாள்.

**விபச்சார உபகரணங்கள்:**

சில நகரங்களில், "அடல்ட் டாய்ஸ்" **(Adult Toys)** என்ற பெயரிலேயே பல கடைகள் திறக்கப்பட்டுள்ளன. அதிலே உடலுறவின் போது இன்பத்தைத் தூண்டக்கூடிய உபகரணங்கள் விற்கப்படுகின்றன.

மேலும் பிளாஸ்டிக்கால் செய்யப்பட்ட பெண் பொம்மைகளும் அங்கு கிடைக்கின்றன. அதனால் நீங்கள் எவ்வித மறுப்புமில்லாமல் அவைகளிடமிருந்து உங்களுக்குத் தேவையான அளவு உடலுறவின் மூலம் இன்பத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

அத்துடன் ஆண்களுக்கு அவர்களின் ஆண்குறியின் தடிமன் மற்றும் நீளத்தை இரட்டிப்பாக்கும் கருவிகளும் கிடைக்கும். அதனால் பெண்ணின் இன்பத்தை அவளுடைய விருப்பத்திற்கு ஏற்ப பூர்த்தி செய்து கொள்ள ஏதுவாக இருக்கும். ஸ்ப்ரேக்களும், மருந்துகளும் கூட சாதாரணமானவைகளே. அதற்கும் மேல் பெண்கள் விலங்குகளுடன் உடலுறவு கொள்வதைக் காட்டும் வீடியோக்களும் சகஜமாக காணக் கிடைக்கின்றன.

**வாய்வழிப் புணர்ச்சி:**

ஒரு ஆணும் பெண்ணும் உடலுறவு கொள்ள முடியாதபோது, அவர்கள் ஒருவருக்கொருவர் அந்தரங்க உறுப்புகளை முத்தமிடவும் உறிஞ்சவும் தொடங்குகிறார்கள். ஆணின் அந்தரங்க உறுப்பை தன் வாயில் நுழைத்துக் கொள்வதின் மூலம் ஒரு பெண் முறையற்ற இன்பம் பெற விரும்புகிறாள்.

அவ்வாறே ஒரு ஆண் நாய் எலும்பை நக்குவது போல, ஒரு பெண்ணின் அந்தரங்க உறுப்புகளை நக்குவதில் முறையற்ற இன்பம் அடைய விரும்புகிறான். இறுதியாக விலங்குகள் கூட தோற்றுவிடுமளவு தகாத காரியங்களை கேடுகெட்ட மனிதர்கள் செய்து விடுகின்றனர்

வெளிநாட்டுச் சூழலில், ஒரு பெண்ணின் கணவன் முப்பது வயது மதிக்கத்தக்க தன் மனைவியை பிரிந்து சென்றால், அவளுக்கு இன்னொரு கணவனைத் தேடுவது கிட்டத்தட்ட முடியாத காரியமாகும்.

ஒரு இரவு விடுதியில், அவளுடைய பாலியல் தேவைகளைப் பூர்த்தி செய்ய தினந்தோறும் ஆயிரம் ஆண்கள் கிடைப்பார்கள். ஆனால் அவளை மணமுடித்து, மனைவியாக வீட்டில்

வைத்துக்கொள்ள எவரும் விரும்புவதில்லை. ஒரு மருத்துவ நண்பரின் கூற்றுப்படி, வெளிநாட்டுச் சூழலில், இளைஞர்கள் மட்டும் ஆபத்திலில்லை. மாறாக வயதான ஒருவர் வீட்டை விட்டு வெளியேறினாலும், அவரைத் திருமணம் முடித்துக் கொள்ளத் தயாராக இருக்கும் சில வயோதிகப் பெண்களையும் அவர் சகஜமாகப் பெற்றுக் கொள்வார்.

சுமார் 32 வயது நிரம்பிய ஒரு பெண், தனது 65 வயதான காதலன் தன்னைச் சந்திக்க வருவார் என்பதற்காக, ஒரு மணி நேரம் ஒப்பனை செய்துகொண்டு, பல மணிநேரம் தன் வீட்டு வாசலில் காத்திருக்கிறாள்.

ஒரு கவிஞரின் கூற்றுப்படி,

*நீ விட்டுச் சென்றாலும், பூக்கடை வியாபாரம் தொடர்ந்து நடக்கும்.*

அக்கம் பக்கத்தில் வசிக்கும் ஒரு முஸ்லிம் பெண், சில சமயங்களில் அவ்வழியே செல்லும்போது அவளிடம் எப்படி இருக்கிறாய் என்று கேட்டால் வாழ்வு மிகவும் சிரமமாகிவிட்டது என்று பதிலளிக்கிறாள்.

### நானும், நீயும், தனிமையாக....

சில ஐரோப்பிய செய்தித்தாள்களில் தவறான தொடர்புக்காக ஏங்கும் ஆயிரக்கணக்கான ஆண், பெண்களின் தொலைபேசி எண்கள் பெரிய பக்கங்களில் அச்சிடப்படும். பல நாட்களாக யாரும் அவர்களைத் தொடர்பு கொண்டு விசாரிக்க வில்லையானால், அவர்கள் தங்கள் தொலைபேசிகளில் ஏக்கம் நிறைந்த சொற்றொடர்களை எழுதி வைப்பார்கள்.

உதாரணமாக, நானும், நீயும், தனிமையாக...

மேலே கூறப்பட்ட நிலைமைகளும், நிகழ்வுகளும் மேற்கத்திய பெண் பர்தா அணியாமல் கலப்புக் கூட்டங்களில் ஒரு அலங்காரப் பொருளாக மாறியதன் மூலம் தன் மதிப்பை எவ்வாறு குறைத்துக் கொண்டாள் என்பதை நிரூபிக்கின்றன

ஒரு ஆணின் உதாரணம் தனக்கு முன்னால் பூக்களை கொத்தாக பெற்றுக் கொண்ட ஒரு தேனீயைப் போன்றதாகும். அது ஒரு பூவின் நறுமணத்தை நுகர்ந்து அதில் அமர்ந்து சாற்றை உறிஞ்சிய பிறகு மீண்டும் அதே பூவில் அமராது. மாறாக மற்றொரு புதிய பூவில் தான் அமரும் என்பது தெளிவானது.

இந்த முழு ஆட்டத்திலும் ஒரு பெண் காம விளையாட்டுப் பொருளாக பாவிக்கப்பட்டுள்ளாள். காட்சியும் அவளே, கதாநாயகியும் அவளே! தன் பர்தாவைத் துறந்து அவள் பெற்றது தான் என்ன? சுதந்திரம் என்ற பெயரில் ஆண்கள் அவளை முட்டாளாக்கியது தான் மிச்சம்.

அவள் கசக்கி எறியப்பட்ட காகிதத்தைப் போல நடத்தப்பட்டபோது தான் தன் வீட்டில் நாய்களை வளர்க்கவும், அவற்றுடன் தனது பாலியல் தேவைகளைப் பூர்த்தி செய்யவும் கட்டாயப்படுத்தப்பட்டாள். அத்தகைய பெண்ணின் பரிதாபகரமான முதுமையை சற்று கற்பனை செய்து பாருங்கள.

அவள் உயிரோடு வாழும்போதே இறந்தவரைப் போன்ற நிலைக்குத் தள்ளப்படுவதை உணர்வீர்கள். ஆனால் இப்படி வாழ்வதை விட இறப்பதே மேலானது என்பதே உண்மை. ஒருவரிடம் எல்லாம் இருக்கிறது, ஆனால் மனிதராக இல்லையெனில் அவர் முழுமையானவர் அல்ல.

இஸ்லாமிய போதனைகளில், அனைவரும் கற்பொழுக்கத்தோடு வாழ வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டதற்கான காரணம் ஆண், பெண் திருமணத்தின் வாயிலாக மரியாதைக்குரிய வாழ்க்கையை வாழ வேண்டும் என்பதற்கேயாகும். கணவனும் மனைவியும் ஒருவருக்கொருவர் இணைந்தே அமைதியைக் காண முடியும் என்று புனித குர்ஆன் ஆணித்தரமாக நிரூபித்துள்ளது.

எனவே, கணவன் மற்றும் மனைவியின் கவனம் பரஸ்பரம் தங்களுக்குள் நிலைத்திருக்கவும், அவர்கள் இருவரும் அன்பு மற்றும் பாசத்தின் மூலமாக அமைதியான வாழ்க்கையை வாழவும், கலப்பு கூட்டங்களை முற்றிலும் தவிர்க்க வேண்டும்.

**பழைய ரொட்டியும் பாக்கியமானதே!**

பசியுடன் இருக்கும் ஒரு மனிதன், தன் வீட்டில் இருக்கும் காய்ந்த மற்றும் பழைய ரொட்டியைக் கூட, பெரும் உபகாரமாகக் கருதி, மகிழ்ச்சியுடனும் ஆனந்தத்துடனும் உண்பான் என்பது ஒரு பொதுவான அவதானிப்பாகும்

இவ்வாறாக கலப்பு கூட்டங்கள் தவிர்க்கப்படும்போது பர்தா அணியாத அழகான பெண்கள் எவரும் பார்வைக்குத் தென்படமாட்டார்கள். எனவே ஒவ்வொரு ஆணும் தன் மனைவியின் சாதாரண தோற்றத்தை கண்டு அவளையே அழகான ஒரு வரமாகக் கருதி, தேவைப்படும் நேரங்களில் அவளிடமே சுகம் பெற்றுக் கொள்வான்.

விவாகரத்து அச்சுறுத்தலோ, அல்லது அவளது அசிங்கமான தோற்றத்தைப் பற்றிய ஏளனங்களோ ஒரு போதும் எழாது. மனைவியின் மனதில் நள்ளிரவில்

ஏன் என் கணவன் தாமதமாக வீடு திரும்புகிறான் என்ற பதட்டமோ, பயமோ, மன வேதனையோ இருக்காது.

இத்தகைய சூழலில், ஒவ்வொரு வீடும் அவளுக்கு ஒரு சிறிய சொர்க்கத்தின் முன்மாதிரியாக மாறும். இதுவே இஸ்லாமிய போதனைகளின் நோக்கமாகும். அப்பேற்பட்ட மேலான இஸ்லாமிய போதனைகளை வரமாகக் கருதி வாழ்வதற்கான நல்வாய்ப்பை அல்லாஹ் நம்மவர்களுக்கு தந்தருள் புரிவானாக. ஆமீன்.

رَضِيْتُ بِاللّٰهِ رَبًّا وَ بِمُحَمَّدٍ نَبِيّا وَ بِالْاِسْلَامِ دِيْنًا

அல்லாஹ்வை என்னுடைய இறைவனாகவும், முஹம்மது நபி ﷺ அவர்களை எம் தூதராகவும், இஸ்லாத்தை என் மார்க்கமாகவும் ஏற்று நான் திருப்தி அடைகிறேன்.